Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 453 பிலவ வருடம், தை மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை
(12.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 10, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

# அரசியல் மாற்றங்கள் விரைவில்; பெசிலுடன் முக்கிய சந்திப்புகள்!

விரைவில் அமைச்சரவை மாற்றம், ஆளுநர்கள் மாற்றம் ஆகியன இடம்பெறவுள்ளன என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

முதலில் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்றும் பின்னர் ஆளுநர்கள் மாற்றம் இடம்பெறும் என்றும் இவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தை ஆதரிக்கின்ற முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. நஸீர் அஹமட் மற்றும் மக்கள் காங்கிரஸ் எம்.பி. இஷாக் ரஹ்மான் ஆகியோர் இராஜாங்க அமைச்சர்கள் ஆகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரத்தில் ஏப்ரல் மாதத்தோடு ஆளுநர்கள் மாற்றம் இடம்பெறும் என்று சொல்லப்படுகின்றது. வட மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் ஜீவன் தியாகராஜாவை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி விரும்பவில்லை என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் புதிய உயர்நிலை பதவிக்கு நியமிக்கப்படுகின்றார் என்றும் இவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

கிழக்கு மாகாண முஸ்லிம்களை பொறுத்தவரை ஆளுநர் பதவி அரசியல் அதிகாரத்தின் அடையாளமாக பார்க்கப் படுகின்ற நிலையில் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய உள்ளூராட்சி,...

02 பக்கம்

# சுகாதாரத்துறை பணியாளர்களின் வருமானம் பகிரங்கப்படுத்தப்படும்



## சுகாதார அமைச்சர் கெஹேலிய கறார்


சுகாதாரத்துறையில் பணியாற்றுபவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் பத்திரிகைகளில் முழுப்பக்கமாக வெளியிடப்படும் என சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த நாட்களில் சுகாதார நிபுணர்கள் செய்துவரும் பணிகள் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

02 பக்கம்

# நீதிமன்ற உத்தரவையும் மீறி சுகாதாரத்துறை போராட்டம்!

## மக்களின் இன்னல் தொடர்கிறது



யோ.தர்மராஜ்

நீதிமன்ற தடை உத்தரவையும் மீறி சுகாதாரத்துறைத் தொழிற்சங்கங்கள் நேற்று ஐந்தாவது நாளாகவும் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகள் முடங்கிப்போயுள்ளன. இதனால் சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இதேவேளை, தங்களுக்கான தீர்வைக் கோரி நேற்று நாட்டில் பல பகுதிகளிலும் தொழிற்சங்கங்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட 07 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 07ஆம் திகதி தொடக்கம் சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

02 பக்கம்



# இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சுங் பதவியேற்றார்

இலங்கைக்கான தூதுவராக ஜூலி சுங்கிற்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பதில் பெருமையடைவதாக பிரதி இராஜாங்கச் செயலாளர் வெண்டி ஆர்.ஷெர்மன் ட்வீட் செய்துள்ளார்.


சியோலில் பிறந்த ஜூலி சுங் கொரிய, ஜப்பானிய, ஸ்பானிஷ் மற்றும் கெமர் மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்.

கம்போடியாவின் புனோம் பென் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் துணைத் தூதராகவும், தாய்லாந்தின் பேங்கொக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

02 பக்கம்

# இதுவரையில் நிதி உதவியை இலங்கை கோரவில்லை

## சர்வதேச நாணய நிதியம் தகவல்



இலங்கை இதுவரையில் நிதி உதவி எதனையும் கோரவில்லை என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

தமது பிரதிநிதிகள் அண்மையில் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்ததாகவும், இந்த விஜயம் தொடர்பில் நிறைவேற்று சபை கலந்துரையாட உள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இதுவரையில் அதிகாரப்பூர்வமாக நிதி உதவிகள் எதனையும் கோரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



அமெரிக்க புதிய தூதுவரம்மா வாறதால ஏதும் பெரிய மாற்றங்கள் வராது பாருங்கோ... அமெரிக்கப் பிரஜைகள் அவாவோட நல்ல நட்பாய் இருப்பாங்க...

# தேர்தலில் வெற்றிபெற அரசியல்வாதிகள் மக்களின் உயிருக்கு தீங்கிழைக்கலாம்!



## அருட்தந்தை காமினி சிறில் தெரிவிப்பு

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக அரசியல்வாதிகள் பொதுமக்களின் உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என அருட்தந்தை காமினி சிறில் எச்சரித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் 2019 தேர்த லுடன் தொடர்புபட்ட சதி என்ற தகவல்கள் வெளியாகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கடந்த காலங்களில் தேர்தல்களில் வெல்வதற்கு பணம், மதுபானம் மற்றும் கூரைத் தகடுகள் உட்பட ஏனைய பொருட்களை வழங்கினார்கள். எனினும் சதிமுயற்சிகள் பற்றிய தகவல்கள்...

02 பக்கம்

# ஜனாதிபதிக்கு எதிராக வவுனியாவில் கறுப்புக்கொடி



05 பக்கம்

# 14ஆம் திகதிவரை மின் தடை இல்லை

எதிர்வரும் 14ஆம் திகதிவரை நாட்டில் மின்வெட்டு இருக்காது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேவைக்கு ஏற்ப போதுமான மின் உற்பத்தி உள்ளதால், மின்வெட்டுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு ஆணைக்குழுவின் தலைவர் பொதுமக்களிடம் விசேட கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.



வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடம் மற்றும் பல்கலைக்கழக கல்வெட்டு என்பவற்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைத்தபின், மக்களுடன் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# கனிய மணல் அகழ்வு போர்வையில் தமிழர் காணிகளை அபகரிக்க முயற்சி

## எதிராக இன்று போராட்டம்

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் புள்ளியான - இதயபூமியான - கொக்கிளாய் தொடக்கம் நாயாறு வரையான தமிழ் மக்களுக்கு சொந்தமான பாரம்பரிய நிலங்களை கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் கையகப்படுத்தும் முயற்சிக்கு எதிராக போராட்டம் இடம்பெறவுள்ளது. இந்த பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்கு...

02 பக்கம்

# யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அதிகரிக்கப்பட்ட எம்.பி. ஆசனம்

புதுப்பிக்கப்பட்ட தேர்தல் பதிவேட்டின்கீழ், யாழ்ப் பாண மாவட்டத்திற்கு ஒரு நாடாளுமன்ற ஆசனம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஒரு நாடாளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இந்த ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், யாழ். மாவட்டத்திற்கான நாடாளுமன்ற ஆசனம் 07ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் துப்பாக்கிச்சூடு; போதைப்பொருள் கடத்தல்காரர் உயிரிழப்பு

மொரட்டுவை – எகொட உயன பகுதியில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டில் போதைப்பொருள் கடத்தல்காரர் 'அபா' உயிரிழந்துள்ளார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஹெரோயின் உள்ளதாகக் கிடைத்த தகவலுக்கமைவாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சிவில் சமூக ஒத்துழைப்பு தேவை

## யாழ். கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் தெரிவிப்பு




02 பக்கம்

## உஷ்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தனது பங்காளிக்கட்சிகளை விட்டுவிட்டு தனியே கூட்டமொன்றை நடத்தியதல்லவா?

இப்போது அந்த பங்காளிக்கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து மார்ச் முதல் வாரத்தில் கொழும்பில் கூட்டமொன்றை நடத்தப் போகின்றனவாம்.

அரசியலில் இனி நல்ல வேடிக்கைகளைப் பார்க்கலாம்.

# கட்டண அதிகரிப்பு குறித்து அரசாங்கத்துடன் பேச்சு

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்கத் தீர்மானித்தால் பஸ் கட்டணங்களின் விலைகளை அதிகரிப்பது குறித்து அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் எனத் தனியார் பஸ் உரிமை யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

02 பக்கம்

### கனிய மணல் அகழ்வு...

சொந்தமான பாரம்பரிய நிலங்களை கனிய மணல் அகழ்வு எனும் போர்வையில் கையகப்படுத்தும் நோக்கோடு நில அளவீடு மேற் கொள்ளப்பட்டு சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே சிங்கள குடியேற்றங்களாலும் இராணுவ ஆக்கிரமிப்பாலும் மகாவலி எல் வலயத்தாலும், வன ஜீவராசிகள் திணைக் களம், வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்ற அரச இயந்திரங்களின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பால் இருப்பு கேள்விக் குள்ளாகி வரும் தமிழ் மக்களின் எல்லை கிராமங்களில் மேலதிகமாக கனிய மணல் கூட்டுத்தாபனத்துக்கு என மிகுதி நிலங்களையும் அபகரிக்கும் வேலையை அரசு மிகத் திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது.

எனவே, தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்த நிலங்களை அபகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கொக்கிளாய் கிராம மக்களால் எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று (12) சனிக்கிழமை, காலை 9.30 மணிக்கு கொக்கிளாய் பாடசாலை முன்பாக போராட்டம் இடம்பெறவுள்ளது.

எனவே, அனைத்து தரப்பினரின் ஆதரவையும் வழங்குமாறு கொக்கிளாய் எல்லைக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### சுகாதாரத்துறை...

"அடுத்த சில நாட்களில் தற்போது சுகாதாரத் துறையில் இருப்பவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் குறித்து நாளிதழ்களில் முழுப் பக்க விளம்பரம் வரும். அப்போது எல்லோருக்கும் இவர்களின் சம்பளம் பற்றிய ஒரு புரிதல் கிடைக்கும். சராசரியாக தாதி ஒருவர் சுமார் 400 மணி நேரம் கூடுதல் நேரம் வேலை செய்கிறார். 150 மணி நேரம் எடுத்துக் கொண்டால், மூன்றாம் தர தாதி ஒருவருக்கு சாதாரணமாக 1,02,000 ரூபாவும் முதல் தர தாதி ஒருவருக்கு 180,000 ரூபாவும் செலவாகின்றது" என்றார்.

### இலங்கைக்கான...

ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் மாற்றம் ஒருங்கிணைப்பாளருக்கான தலைமைப் பணியாளராகவும் இருந்தார். கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும், சீனாவின் குவாங்சோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார்.

கலிபோர்னியா-சான் டியாகோ பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலை கலைப் பட்டத்தையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச மற்றும் பொது விவகாரப் பள்ளியில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### கட்டண அதிகரிப்பு குறித்து...

இது குறித்து ஆராய்ந்து வருவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஐ.ஓ.சி. விலைகளை அதிகரித்துள்ளதை தொடர்ந்து அதனிடமிருந்து எரிபொருட்களை கொள்வனவு செய்வதை குறைத்து வருவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விலைகள் அதிகரித்தால் அதனை எங்களால் சமாளிக்க முடியாது என சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### பொலிஸ் துப்பாக்கிச்சூடு:...

இதன்போது, வீட்டிலிருந்த ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் துபாயிலுள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் உதவியாளரான 27 வயதான அபா எனும் நபர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது, பொலிஸ் விசேட அதிரடிப்படை உறுப்பினர் ஒருவருக்கும் காயமேற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குறித்த சந்தர்ப்பத்தில் இருந்த 06 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

### இதுவரையில் நிதி...

எவ்வாறெனினும், கோரிக்கை விடுக்கப் பட்டால் பேச்சுவார்த்தை நடத்த தயார் எனவும், இலங்கையின் பொருளாதார நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கை அரசாங்கம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தேர்தலில் வெற்றிபெற...

உண்மை என்றால் தேர்தலுக்காக முதன் முதலில் மக்கள் இலக்குவைக்கப்பட்டது கடந்த தடவைதான்.

தேர்தலில் வெற்றிபெறுவதற்கு அது சிறந்த தந்திரோபாயம் என சிலர் கருதினால் ஏனையவர்களும் அதனை பயன்படுத்துவார்கள். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சதி முயற்சியில் தொடர்புபட்டவர்கள் என தெரிவிக்கப்படுப வர்களை கைதுசெய்யவேண்டும்.

அவர்களை கைதுசெய்யாவிட்டால் அதனால் ஜனநாயகத்துக்கு ஆபத்து. முன்னாள் சட்டமா அதிபரை நீதியின் முன்நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து சட்டத்தரணிகளுடன் ஆராய்ந்து வருகின்றோம். முன்னாள் சட்டமா அதிபர் சதி முயற்சி குறித்து தெரிவித்துள்ளார். எனினும், என்ன சதி என தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்கலாம்
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கலப்பு முறையில் நடத்துவது குறித்து அவதானம்





விகிதாசார மற்றும் தொகுதிவாரி முறையை உள்ளடக்கிய கலப்பு முறையின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கமைய, 60 வீத அல்லது 70 வீத உறுப்பினர்களை விகிதாசார முறையின் கீழும், 40 வீத அல்லது 30 வீத உறுப்பினர்களைத் தொகுதி வாரி முறையின் கீழும் தெரிவு செய்வது தொடர்பில் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற விசேட குழு அதன் தலைவர் சபை முதல்வர், கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் (10) கூடியபோதே இவ்விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது, அனைத்து அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு அதிக இடத்தை வழங்குவது பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

அதேநேரம், தேர்தலில் வெற்றிபெறும் கட்சிக்கு போனஸ் ஆசனத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. விசேடமாக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் தற்பொழுது காணப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. தேர்தல் முறை தொடர்பில் சுயாதீனத் தொலைக்காட்சி நிறுவனம் சமர்ப்பித்துள்ள பரிந்துரைகள் மற்றும் எம்.டி.வி. (தனியார்) தொலைக்காட்சி நிறுவனம் சமர்ப்பித்துள்ள பரிந்துரைகளும் இக்குழுவில் முன்வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாசீம், ரவூப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன், மனோ கணேசன், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோரும் இக்குழுவின் செயலாளர் நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியுமான குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டிருந்தனர்.

# இவ்வருடம் பஸ் கட்டணங்களை அதிகரிக்கப் போவதில்லை

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் இவ்வருடம் பஸ் கட்டணங்களை அதிகரிக்கப் போவதில்லையென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் பஸ் உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதமளவில் பஸ் கட்டணங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்படும் நிலையில், எரிபொருள் விலையேற்றத்துடன் கடந்த வருடத்துக்கான பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இந்நிலையில், இவ்வருடம் முழுவதும் பஸ் கட்டணங்களை அதிகரிக்காது இருப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், சில சமயங்களில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படும்போது பெருமளவு தொகையினால் பஸ் கட்டணங்களை அதிகரிக்காது இருப்பதற்கே எதிர்பார்த் துள்ளதாகவும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

### அரசியல் மாற்றங்கள்...

மாகாண சபைத் தேர்தல்களில் முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்து முஸ்லிம் ஒருவருக்கு ஆளுநர் பதவி வழங்கப்பட வாய்ப்பு இருப்பதாக பேசப்படுகின்றது.

இதற்கிடையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரட்ன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் எம்.பி. மர்ஜான் பளீல், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட எம்.பி. எஸ்.எம்.எம். முஷாரப் உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகள் பலரும் கடந்த நாட்களில் பெரமுன தலைமை அலுவலகத்தில் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேசியுள்ளனர் என்றும் அறிய கிடைக்கின்றது.

பெசில் ராஜபக்ஷவுடனான சந்திப்பில் நட்பு பாராட்டி நடந்து கொண்ட ரவூப் ஹக்கீம், மு.கா. அரசாங்கத்தில் இணைய வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை நாகரிகமாகவும் இராஜதந்திரமாகவும் மறுத்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### நீதிமன்ற உத்தரவையும்...

அதன்படி, இலங்கை தாதியர் சங்கம், சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் மற்றும் இடைநிலை வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் தொடர் வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

இவர்களின் போராட்டத்தால் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகள் எவ்வித செயற்பாடுகளுமின்றி முடங்கிப் போயுள்ளன. இதனால், சிகிச்சைகளுக்காக வருகை தந்த நோயாளிகள் பெரும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

இவர்களுடைய கோரிக்கைகள் தொடர்பாக கடந்த 9ஆம் திகதி சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்திருந்தமையினால், தங்களுடைய வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடர்வதாக தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்தன.

இதனையடுத்து, அரச தாதியர் சங்கம் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் (10) தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

சட்டமா அதிபர் நீதிமன்றில் விடுத்த கோரிக்கையின் பிரகாரம், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இதன்படி, வேலை நிறுத்தம் காரணமாக நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னப்பிரிய ஆகியோருக்கு எதிராக இரண்டு தடை உத்தரவு பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் கோரிக்கை விடுத்திருந்தது.

சட்டமா அதிபரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவருக்கு இரண்டு தடை உத்தரவுகளை வழங்கியிருந்தது. எனினும், இந்த தடை உத்தரவுகளையும் மீறி நேற்று (11) ஐந்தாவது நாளாகவும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனால், நாடளாவிய ரீதியில் ஐந்தாவது நாளாகவும் பொது மக்களும் நோயாளர்களும் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதுடன், நுவரெலியா, கொழும்பு, உள்ளிட்ட பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தாலும் பொது மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

### மீனவர் பிரச்சினைக்குத்...

**யாழ். நிருபர்**

இலங்கை - இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு புத்திஜீவிகள், சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பு தேவை என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

வடக்கில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட நான்கு மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலுக்கு பின்னர் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை சரியாக ஆராய்ந்து அதனை இராஜதந்திரரீதியில் நகர்த்த வேண்டிய தேவையுள்ளது. இவ்விடயம் தொடர்பில் கடந்த வாரமும் யாழ். மாவட்ட ரீதியில் கலந்துரையாடியிருந்தோம். அதேபோல இன்றைய தினம் வடமாகாணத்துக்கு உட்பட்ட நான்கு கடற்றொழில் சம்மேளனப் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடியுள்ளோம்.

இந்த கலந்துரையாடலின் அடிப்படையிலே நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள் எங்களுக்கு ஆதரவு தருமாறும் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எங்களோடு இணைந்து செயற்பட வருமாறும் கோரியிருக் கின்றோம்.

அதனடிப்படையில், எதிர்காலத்தில் வடக்கு கடற்றொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒரே குடையின் கீழ் செயற்படுவதற்கு நான்கு மாவட்டங்களிலும் இருக்கின்ற கூட்டுறவுச் சமாசங்கள் ஒன்றிணைந்து செயற்படுவது தான் எங்களுடைய நோக்கமாக காணப்படுகின்றது.

கடற்றொழிலாளர்களிடையே பிளவினை ஏற்படுத்தாது எமது ஒற்றுமையை வலுப்படுத்தி நாம் ஒற்றுமையாக தீர்வினை நோக்கி நகர்வதற்கு அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். கட்சி பேதமின்றி கடற்றொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகளை ஆக்கப்பூர்வமாக ஒரே குடையின் கீழ் கையாள வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கை - இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு 4 மாவட்டங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எம்முடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். எதிர்காலத்தில் கடற்றொழிலாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடாமல் இருப்பதற்கு நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து சிவில் சமூகங்கள், புத்திஜீவிகளின் ஒத்துழைப்பு கட்டாயம் அவசியம் என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன்சன், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ராஜா குரூஸ், பூநகரி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் பிரான்சிஸ், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் அன்னராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேசிய பல்கலைக்கழகமாக வவுனியா வளாகம் மாற்றம் ஜனாதிபதி கோட்டாபய உத்தியோகபூர்வமாக திறந்துவைப்பு
































***(வவுனியா செய்தியாளர், ஜனாதிபதி ஊடகப்பிரிவு)***

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த வவுனியா வளாகம், 'வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயரில் தேசிய பல்கலைக்கழகமாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (11) இடம்பெற்றது.

இதன்படி, இந்நாட்டின் 17ஆவது அரச பல்கலைக்கழகமாக வவுனியா பல்கலைக்கழகம் வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பிரயோக விஞ்ஞான பீடம், வர்த்தக பீடம் மற்றும் ஆங்கில மொழிப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய வவுனியா வளாகம், 1997ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த வவுனியா வளாகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றுமாறு, மாணவர்கள் மற்றும் பேராசியர் குழாமினால் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இதனைக் கருத்திற்கொண்ட தற்போதைய அரசாங்கம், சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் உயர்க் கல்வியை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், விரிவுரை மண்டபங்கள், பீடங்களுக்கான கட்டிடங்கள், விளையாட்டு மைதானம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கூடிய பல்கலைக்கழகமாக வவுனியா பல்கலைக்கழகம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

வவுனியா பல்கலைக்கழக விடுதி மைதானத்தில் கூடியிருந்த பிரதேசவாசிகள், நிகழ்வு இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை வரவேற்றதுடன் அவருடன் கலந்துரையாடினர்.

வவுனியா வளாகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றும் நிகழ்வைப் பதிவு செய்யும் நோக்கில் கல்வெட்டைத் திறைநீக்கம் செய்து திறந்துவைத்த ஜனாதிபதி, பல்கலைக்கழகத் தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் மற்றும் சகவாழ்வு மையம் போன்றவற்றை மாணவர் பாவனைக்குக் கையளித்தார்.

தாம் பெற்றுக்கொள்ளும் அறிவைத் தமது பிரதேசங்களுக்கே வழங்க முடியுமானால், அதுவே தான் பிறந்த இடத்துக்கும் நாட்டுக்கும் செய்யும் பெரும் சேவையாகுமென்று எடுத்துரைத்தார். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சமூக மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய புத்திஜீவிகளைக் கல்வியினூடாகச் சமூகமயப்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று, நிகழ்வின் பிரதான உரையை நிகழ்த்திய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடொன்று பலமடைய வேண்டுமாயின், அந்த நாட்டின் கல்விக் கட்டமைப்பு பலமடைந்திருக்க வேண்டும். அதுவே, பயனுள்ள முதலீடாகுமென்று எடுத்துரைத்த ஜனாதிபதி, தேசிய கல்வியைக் கட்டியெழுப்புவதற்கே தற்போதைய அரசாங்கம் முன்னுரிமையளித்துள்ளது என்றார்.

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப் படும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விடுதிகள் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து, பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைப் படிப்படியாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். கலைப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான பாடத்திட்டங்களைச் சமூகத் தேவைகளுக்கேற்ப தயாரிப்பதற்காகப் பல்கலைக்கழகக் கட்டமைப்பு முன்னெடுத்த வேலைத்திட்டங்களுக்கும் ஜனாதிபதி இதன்போது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

உலகில் அதிக கேள்வி நிலவும் துறைகளை அடையாளம் கண்டு, அத்துறைகளினூடான புத்திஜீவிகளை உருவாக்கும் காலத்தின் தேவையை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பென்றும் எடுத்துரைத்தார்.

"உங்களதும், உங்கள் நண்பர்களதும் மனங்களில் தேசிய சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு, இவ்வாறான பல்கலைக்கழகங்களின் விடுதிகளையும் வகுப்பறைகளையும், மைதானங்களையும், சிற்றுண்டிச்சாலைகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்திக் கொள்ளும் பந்தங்கள் மிகவும் பெறுமதிவாய்ந்தவை என்றும் அந்தத் தொடர்பு, இந்த நாட்டினது அபிவிருத்திக்கு பெரும் ஊன்றுகோலாக இருக்குமென்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன், புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான சம்பத் அமரதுங்க ஆகியோரும், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## உடவளவையிலிருந்து வத்தளைக்கு இறைச்சிக்காக கொண்டுவரப்பட்ட எருமைகள்

### லொறியுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது



உடவளவையிலிருந்து சட்டவிரோதமாக 17 எருமை மாடுகளை இறைச்சிக்காக ஏற்றிவந்த லொறியொன்றை தெற்கு அதிவேக நெடுஞ்சாலை பரவகும்புகவில் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரை நேற்று (11) கைதுசெய்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலைக்குள் உள்நுழையும்போது பொலிஸாரால் லொறி சோதனையிடப்பட்டபோது எருமை மாடுகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடவளவையிலிருந்து வத்தளைக்கு எருமை மாடுகளை ஏற்றிவந்ததாக சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும், இந்த மாடுகள் அனைத்தும் களவாடப்பட்டவை என்றும் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

வத்தளையில் இறைச்சிக்காக வெட்டுவதற்காக இவை திருடப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கசிப்பு கொள்கலன்களுடன் வவுணதீவில் ஒருவர் கைது

***(மண்முனை செய்தியாளர்)***

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பொலிஸ் பிரிவில் கசிப்பு கொள்கலன்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு முள்ளாமுனை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட கசிப்பு கொள்கலன்களை நேற்று (11) மோட்டார் சைக்கிள் ஒன்றில் விற்பனைக்காக எடுத்துச் செல்லும் வேளையில், வவுணதீவு பொலிஸ் நிலைய விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைவாக மேற்கொண்ட நடவடிக்கையின்போது குறித்த நபருடன் மோட்டார் சைக்கிள் மற்றும் கசிப்பு போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 33 ஆயிரத்து 750 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## புகையிரதம் தடம்புரண்டதால் மலையக ரயில் சேவை பாதிப்பு





***(இரா.யோகேசன்)***

வட்டவளை புகையிரத நிலையத்துக்கு அருகில் சரக்கு புகையிரதம் நேற்று (11) தடம் புரண்டதன் காரணமாக மலையக ரயில் சேவை பாதிப்படைந்ததுடன் கொழும்பு மற்றும் பதுளை புகையிரத சேவையும் தடைப்பட்டது.

பொருட்களை ஏற்றி வந்த சரக்கு புகையிரதம் பாதையை விட்டு விலகியதன் காரணமாக புகையிரத சேவைகள் பல மணிநேரம் பாதிப்படைந்தன. இருப்பினும், வட்டவளை புகையிரத நிலையத்தின் அருகில் பாதிப்புக்குள்ளாகி நிறுத்தப்பட்டிருந்த புகையிரதத்தின் இரு புறங்களிலும் கொழும்பிலிருந்து வந்த புகையிரதமும் பதுளையிலிருந்து வந்த புகையிரதமும் நிறுத்தப்பட்டு பயணிகள் மாற்றி ஏற்றப்பட்டு புகையிரத சேவை இடம்பெற்றது.



இருப்பினும் இதன்போது, பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகினர். இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளும் உள்ளடங்கியிருந்தனர். மேலும், தடம்புரண்ட புகையிரதத்தை மீளவும் செயற்படுத்துவதற்கு புகையிரத ஊழியர்கள் முயற்சித்தனர். அத்துடன் குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கொவிட் தொற்றுக்குள்ளானோருக்கான தனிமைப்படுத்தல் காலம் 7 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது எவ்வித தொற்று அறிகுறிகளுமற்ற, உடலில் மிகக் குறைவான வைரஸ் காணப்படும் தொற்றுக்குள்ளானோரே பெருமளவில் காணப்படுகின்றனர்.

எனவேதான், கொவிட் தொற்றுக்குள்ளானோருக்கான தனிமைப்படுத்தல் காலம் 7 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றிருப்பார்களாயின், அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படத் தேவையில்லை.

கொவிட் தொற்று முதன்முதலாக இனங்காணப்பட்டபோது அது எத்தனை நாட்களுக்கு மனித உடலில் தங்கும் என்று தெரியாது. எனவேதான், 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலமாக குறிப்பிடப்பட்டது.

எனினும், தற்போது ஒமிக்ரொன் பரவல் காணப்படுகின்றபோதிலும், தொற்றாளர்களிடம் வைரஸின் வீதம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இலங்கையில் மாத்திரமன்றி, சர்வதேச மட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு தரவுகளின் அடிப்படையிலும் தற்போது 7 நாட்கள் தனிமைப்படுத்தல் காலம் போதுமானதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அத்தோடு கொவிட் தொற்றுக்குள்ளானோருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றிருந்தால் தனிமைப்படுத்தலுக்கு உட்படத் தேவையில்லை. காரணம், அவர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகும் வீதமும், ஏனையோருக்கு தொற்றினைப் பரப்பும் வீதமும் மிகக் குறைவாகும்.

எவ்வாறிருப்பினும் தொற்றுறுதியானவர்கள் 7 நாட்கள் தனிமைப்படுத்தலின்றி வெளியிடங்களுக்கு செல்ல முடியும் என்று கூறப்படவில்லை எனவும் ஹேமந்த ஹேரத் இதன்போது தெரிவித்துள்ளார்.

அன்றாட நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டதாக தோற்றம் காணப்பட்டாலும், கொவிட் நோய்த்தொற்றுப் பாதிப்பு முற்றிலுமாக அடங்கிவிட்டதாகக் கருத முடியாது.

உயிரிழப்பு எண்ணிக்கை பழைய வேகத்தில் இல்லாவிட்டாலும்கூட, இன்னும் தொடர்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

மூன்றாவது அலை மெல்ல மெல்ல அடங்குவது போன்ற தோற்றம் காணப்பட்டாலும், நோய்த்தொற்றுப் பரவலும், உயிரிழப்புகளும் தொடர்கின்றன. இரண்டாவது அலை டெல்ட்டா உருமாற்றம்போல், மூன்றாவது அலை ஒமிக்ரொனின் பாதிப்பு கடுமையாக இல்லை என்கிற அளவில் வேண்டுமானால் ஆறுதல் அடையலாம்.

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 12ஆம் திகதி, சனிக்கிழமை

# தடுப்பூசியை தவிர்க்காமல் பெற்றுக்கொள்வோம்!

உலகளவில் எடுத்துக்கொண்டால் கொவிட்-19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டு நாட்களுக்கு முன்பு 40 கோடியைக் கடந்துள்ளது என்று 'வேர்ல்டோ மீற்றர்' வலைத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சர்வதேச அளவில் கொவிட்-19இற்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 57,98,707 ஆக உயர்ந்துள்ளது.

பாதிப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் இருக்கின்றன. பாதிப்பு எண்ணிக்கையில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் இந்தியா இருந்தாலும்கூட, உயிரிழப்பு எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது பிரேஸில்.

அமெரிக்காவில் மட்டும் இதுவரை 7,88,24,393 பேர் பாதிக்கப்பட்டு, 9,35,922 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். பிரிட்டன், ரஷ்யா, துருக்கி, இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தலா ஒரு கோடிக்கும் அதிகமானோர் கொவிட்-19 பாதிப்பை எதிர்கொள்ள நேர்ந்தது.

10 வாரங்களுக்கு முன்பு ஒமிக்ரொன் உருமாற்றம் கண்டறியப்பட்டதற்கு பிறகு இதுவரை ஏறத்தாழ ஒன்பது கோடி பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் தெரிவித்திருக்கிறார். உடனடியாக அனைத்துக் கட்டுப்பாடுகளையும் உலகளவில் அகற்றுவது என்பது புதிய உருமாற்றத்துக்கும், நோய்த்தொற்றுப் பரவலுக்கும் வழிவகுக்கக்கூடும் என்கிற அவரது எச்சரிக்கை கவனத்துக்குரியது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தொழில்நுட்பப் பிரிவின் தலைவர் மரியா கிர்கோவின் எச்சரிக்கையும் அச்சத்தை ஏற்படுத்துகிறது. ஒமிக்ரொன் கடைசி உருமாற்றமாக இருக்காது என்றும், உருமாறிய நான்கு தீநுண்மிகள் குறித்து ஆய்வு நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். புதிய உருமாற்றமடைந்த வைரஸ்களில், இதுவரையில்லாத அளவிலான பரவல் வேகமும், பாதிப்பும் காணப்படும் என்பது அவரது எச்சரிக்கையாகும்.

டெட்ரோஸ் அதனோமின் அறிக்கைபடி, நோய்த்தொற்றுப் பரவலும், உயிரிழப்பும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. பல நாடுகளில் பெரும்பாலான மக்களுக்கு இன்னும் தடுப்பூசி போடப்படவில்லை. அதனால், புதிய உருமாற்றங்கள் ஏற்படுவதையும், அவற்றின் வீரியம் குறித்தும் இப்போதே எதுவும் கூற முடியாது என்கிறது உலக சுகாதார ஸ்தாபனம்.

இலங்கை மக்கள்தொகையில் தடுப்பூசிக்குத் தகுதியான 75 வீதமான பேருக்கு இரண்டு தவணை தடுப்பூசிகள் போடப்பட்டிருந்தாலும் கூட, இன்னும் பல இலட்சம் பேர் தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை. கொவிட்-19 வைரஸின் கடைசி உருமாற்றமாக ஒமிக்ரொன் இருக்காது என்பது உறுதியாகியிருக்கும் நிலையில், நாம் மெத்தனப்போக்கைக் கடைப்பிடிக்க முடியாது.

நோய்த்தொற்று வீரியமிழந்து அடங்கிவிடும் என்கிற உறுதி இல்லை. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, பாதுகாப்பைக் கைவிடுவது புத்திசாலித்தனமாக இருக்காது.

அடுத்த சில மாதங்களுக்கு நோய்த்தொற்றுப் பரவல் குறைந்து காணப்படுகிறது என்பதற்காக கட்டுப்பாடுகளை முழுவதுமாகக் கைவிட்டால், அது விபரீதத்துக்கு வழிவகுக்கக்கூடும்.

பூஸ்டர் டோஸ் எனப்படும் மூன்றாவது தவணைத் தடுப்பூசி ஒமிக்ரொனை எதிர்கொள்ள உதவியது என்பதால் 45 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் பூஸ்டர் டோஸ் போடுவதற்கான முனைப்பு முன்னெடுக்கப்பட வேண்டும்.

பொருளாதார இயக்கம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில், புதிய உருமாற்றம் குறித்த கண்காணிப்பு மிக மிக அவசியம். சிறிய கவனக்குறைவும்கூட மீண்டும் பெரிய அளவிலான நோய்த்தொற்றுப் பரவலுக்கு வழிவகுக்கக்கூடும் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். கண்ணுக்குத் தெரியாத வைரஸ் ஒரு மாயாவி என்கிற புரிதல் அவசியம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் வீண் வதந்திகளை நம்பாமல் மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதே சிறந்தது.

# குடும்பமா? பெண்ணியமா?



சமீபத்தில், "குடும்பம் என்பது ஆணாதிக்க அமைப்பு முறை" என்றொரு வாசகத்தைக் கேட்க நேர்ந்தது. குடும்பம் என்பது இங்கே மனிதரின் ஆரோக்கிய வாழ்க்கைக்கான அடித்தளம் அல்லவா? ஆதிக்கம், அடிமைத்தனம் போன்ற எண்ணங்களை மனித மனம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. அதிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு அன்பு, தயை, காதல் போன்ற மென்னுணர்வுகளை, இன்பத்தை அடைவதற்கான வழிதானே குடும்பம்.

ஆணும், பெண்ணும் கூடி வாழ்தல் என்பது அறம். தமிழர் வேதமாம் திருக்குறள் இல்லறம் என்றே அதனைக் கூறுகிறது. இல்லறவியல், ஆணும், பெண்ணும் கூடி வாழ்ந்து ஆற்ற வேண்டிய கடமைகளைப் பட்டியலிடுகிறது. அப்படியிருக்க, குடும்பம் என்பது ஆணாதிக்க அமைப்புமுறை என்ற கருத்து ஏன் முன்வைக்கப்படுகிறது?

ஒரு குருவியின் கூடு அந்த ஒற்றைக் குருவியின் அறிவும், உழைப்பும் மட்டுமல்ல. அது பல்லாயிரம் ஆண்டுகால அனுபவத்தின் தொடர்ச்சியே. அதுபோலவே நம்முடைய குடும்ப அமைப்பு என்பதும், பல நூறு தலைமுறை மாந்தரின் அனுபவத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறப்பான பாதுகாப்பு அமைப்பாகும்.

யாருக்கான பாதுகாப்பு என்ற வினா தற்போது எழலாம். ஆண், பெண், சமூகம், கலாசாரம், பண்பாடு, மொழி, அறம் என அனைத்தின் பாதுகாப்பும் குடும்பம் என்ற அமைப்பின் வழியாகவே தொன்றுதொட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையை உடைத்துவிட்டால் அல்லது சிதைத்துவிட்டால் இனத்தையே முழுமையாக இல்லாமல் செய்துவிடல் சாத்தியமாகிவிடும்.

பெண்ணியம் என்ற கருத்தாக்கத்தை நம்புவோர், குடும்பம் என்பது ஆணாதிக்க அமைப்பு முறை என்ற கருத்தை முன்வைக்கின்றனர். பெண் போகத்திற்கானவள், அதற்கான வாய்ப்பில்லாவிடில் அவளைத் துறந்து மற்றொரு பெண்ணிடம் தன்னுடைய உறவைப் புதிதாகத் தொடங்கிக்கொள்ளலாம் என்ற மேற்கத்திய சிந்தனையில் இதற்குப் பொருள் இருக்கலாம்.

பாரத தேசத்திலோ திருமணம் என்பது பல ஜென்மங்களாகத் தொடர்ந்துவரும் ஆணுக்கும் பெண்ணுக்குமான பந்தம். பெண் போகத்திற்கானவள் அல்ல. அவள் சகதர்மிணி, அர்த்தாங்கினி, இல்லாள், இல்லத்தரசி.

"வித்யாமித்ரம் ப்ரவாசேஷு பார்யாமித்ரம் க்ருஹஸ்சஸ
வ்யாதித ஔஷதம் மித்ரம் தர்மோ
மித்ரம் ம்ருதஸ்யச"

என்கிறது ஒரு சம்ஸ்கிருத சுபாஷிதம். அதாவது, அயல்தேசத்தில் கற்ற கல்வியும், இல்லத்தில் மனைவியும், நோயுற்றால் மருந்தும், மரணத்தில் தர்மமுமே நண்பர்கள். இங்கே, ஆணின் சிறந்த நட்பாகப் பெண் இருக்கிறாள்.

பெண்ணும், ஆணும் இணைந்து வாழவேண்டியதே இயற்கையின் விதிமுறை. ஒருவரின்றி மற்றவர் வாழ்க்கை முழுமையடையாது என்ற அடிப்படையிலேயே வாழ்வியல் முறைகளை நன்கு உணர்ந்த நம் முன்னோர் நமக்கு வகுத்துத் தந்திருக்கின்றனர். ஆண், பெண்ணின் துணையோடுதான் தர்ம காரியங்களில் ஈடுபடல் சாத்தியம் என்ற விதிமுறையே, பெண்ணுக்குரிய சரிபாதி உரிமை இடத்தை வழங்குவதற்கானதே.

"பெண்ணின் தற்போதைய நிலையை உணர்ந்துகொள்ளாமல், அதற்கான தீர்வுகளைப் பேசாமல், வேத காலத்தில் பெண்கள் இப்படியிருந்தார்கள், தெய்வமாக வணங்கப்பட்டார்கள் என்று வேத காலப் பெண்களையும், ஔவையாரையும் எத்தனை காலத்திற்கு உதாரணமாகக் கூறி உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளப் போகிறீர்கள்? பெண்களுக்கெதிரான வன்முறைகள், பாலியல் தொல்லைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணுங்கள் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மைதான் என்றாலும், திருவள்ளுவர் நமக்குக் கற்றுக் கொடுத்ததை மனதிற்கொண்டு அணுகலாம். "நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" இன்றைய பிரச்சினையின் மூலகாரணம் யாது என அறிந்து அதனை சரிசெய்துகொள்வது தீர்வாக இருக்கும். அதைவிடுத்து ஆணுக்கு எதிர்நின்று போராடுவது எவ்வாறு தீர்வாக இருக்க முடியும்?

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இங்கே பெண்களுக்கெதிரான மனநிலையும், கொடுமைகளும் தொடர்வதாக சொல்லும் கருத்தின் உள்நோக்கம் என்ன? சிந்திக்க வேண்டும். லட்சுமி கிருஷ்ணன் என்பவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய இராணுவத்தில் இருந்தவர். நம்மோடு இருப்பவர். இன்றைக்குக் கேள்விப்படுவதைபோல் அன்றைக்கு எவ்விதத் தொந்தரவும் இருக்கவில்லை. மாறாக, பெண்களின் பங்களிப்பு இல்லாமல் நாம் எதையும் சாதிக்க முடியாது என்ற நம்பிக்கையே இருந்தது என்கிறார்.

பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜகந்நாதன் இன்றும் ஒரு தீவிர செயற்பாட்டாளராக இருக்கிறார். அவர், பூதான இயக்கத்திற்கென விநோபா பாவேவுடன் நாடு முழுவதும் நடைப்பயணம் மேற்கொண்ட காந்தியவாதி. தங்கள் போராட்டங்களில் ஆண் - பெண் பேதமற்ற செயற்பாட்டோடு, இலட்சியமே பிரதானமாக இருந்தது என்றும் குறிப்பிடுகிறார்.

ஆக, பல்லாயிரம் ஆண்டுகால அடிமைத்தனம் என்பதில் உண்மையில்லை.

சில பத்தாண்டுகளுக்கு முன்னர் பெண் பொருளாதார சுதந்திரமடைந்து தனக்குத் தொல்லை தரும் குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறி தனித்து வாழ்வதே புதுமைப் பெண்ணின் அடையாளம் என்ற தீவிரமான பிரசாரம் அழுத்தமாக இருந்தது. என்றாலும், பிரச்சினை தீரவில்லை. தற்போது பொருளாதார சுதந்திரம் சாத்தியமாகியிருக்கிறது, பாதுகாப்பு கேள்விக்குறியாகியிருக்கிறது. பெண்ணியவாதிகளேகூட எதிர்பார்த்திராத சிக்கல், உளவியல் ரீதியாக ஏற்பட்டிருக்கிறது. மனதில் தனிமை பெரும் சுமையாக மன அழுத்தமாக உருவெடுத்திருக்கிறது.

இதற்கான தீர்வு மறுமணம், கட்டற்ற பாலியல் சுதந்திரம் என்ற இன்னொரு முறையைப் பற்றியும் பேசுகிறார்கள். நல்லவேளையாக நம் முன்னோர்கள் நமக்குள் ஏற்படுத்தியிருக்கும் ஒழுக்க சிந்தனைகளால் நம் குடும்பத்துப் பெண்கள் அத்தகைய முறைகளைப் புறந்தள்ளுகிறார்கள். மறுமணம் என்பது மீண்டும் குடும்ப அமைப்புக்குள் வருவதுதான். குடும்ப அமைப்பைப் புறந்தள்ளினால் குழந்தைகளின் மனநிலையில் தோன்றும் சிக்கல்களுக்கு யார் விடை சொல்வது?

ஒரு நடைமுறை அமைப்பை வேண்டாமென உதறுவதற்கு முன்னர், அதனை உதறிவிட்டு நாம் கைகொள்ளப் போகும் அமைப்பு யாது? அந்த அமைப்பு தற்போதைய அமைப்பைவிட மேம்பட்டதா என்று சிந்தித்து முடிவுசெய்வதே அறிவுடைமையாக இருக்கும்.

அமெரிக்கர்களில் ஐந்தில் ஒருவருக்கு மனநலப் பிரச்சினை இருப்பதாக "மென்டல் ஹெல்த் அமெரிக்கா" என்ற அமைப்பு கூறுகிறது. 46 சதவீத அமெரிக்கர்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் மனநல சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கிறது. இத்தகைய நிலை செல்வவளம் கொழிக்கும் ஒரு தேசத்தில் ஏன் ஏற்படுகிறது? சுகம் துய்ப்பதும், ஆடம்பரமான பொருள் சேர்க்கும் சொகுசு வாழ்க்கையும் தேடும் மேற்கத்திய கலாசாரம் ஏன் இப்படித் தடுமாற வேண்டும்? ஏனெனில், அவர்களுக்கு எதிர்பார்ப்பற்ற அன்பு கிடைப்பதில் சிக்கல் இருக்கிறது. குடும்பம், தாய், தந்தை, உடன் பிறந்தோர், தாத்தா, பாட்டி என்ற உறவுகள் அவர்களை அரவணைப்பதற்கு இல்லை. குழந்தைகளின் சிறுவயதிலேயே பெற்றோர் இருவரும் தத்தமது வழிகளில் பிரிந்துசென்று புதிய வாழ்க்கைத்துணையோடு தங்கள் வாழ்வைத் தொடர்கின்றனர். இந்த நிலையிலிருந்து விடுபட்டு நிறைவான வாழ்க்கை வாழ அவர்கள் ஆன்மீகம் மற்றும் யோகா வகுப்புகளை நாடி பெருமளவில் வருகின்றனர்.

நம்முடைய பெரியோர்கள் சுகம் துய்ப்பது மட்டுமே வாழ்க்கையல்ல, அது அறவழிப்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கும் வாழ்வியல், நம் தேசத்தை இன்றளவும் காத்துவருகிறது. அன்பின் அடிப்படையில் இருவரும் இணைந்து அடுத்த தலைமுறையை உருவாக்க வேண்டும். முந்தைய தலைமுறையைப் பாதுகாக்க வேண்டும். அதாவது, கூடி வாழ்தல்.

இந்தக் கூடி வாழ்வதில் விட்டுக்கொடுத்தல், அனுசரித்து நடந்துகொள்வது போன்ற வளைந்து கொடுக்கும் தன்மை கட்டாயமாகிறது. இது பெண்களுக்குத்தான் என்பதில்லை. இருபாலருக்கும் பொருந்தும். தன் குடும்பத்திற்காக இளமைக் காலம்முதல் இறுதிவரை உழைக்கும் ஆண்களே தற்போதும் பெரும்பான்மையாக உள்ளனர்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் களைய பல சட்டங்கள் இருக்கின்றன. அவை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி வழங்கட்டும். அதேநேரத்தில், பெண்ணியம் போன்ற இரவல் சித்தாந்தங்கள் நம்முடைய கலாசாரத்திற்குப் பொருத்தமற்றவை. தீர்வுகளைவிட சிக்கல்களையே அதிகம் ஏற்படுத்தக்கூடியவை என்ற புரிதல் அவசியம்.

"பெண் என்பவள் தாயாகவே பிறக்கிறாள்" என விவேகானந்தர் சொன்னதை நினைவில் கொள்வோம். ஒவ்வொரு தாயும் ஆண் குழந்தைகளுக்குப் பெண்களை எப்படி மரியாதையோடு நடத் வேண்டும் என்றும், பெண் குழந்தைகளுக்கு சக ஆண்களை எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கற்றுக்கொடுத்தால் போதும். இப்படியான புதிய தலைமுறை அனைத்துக் குடும்பங்களிலும் உருவானால், விரும்பும் ஆரோக்கியமான மாற்றம் சாத்தியமாகிவிடும்.

குடும்பம் என்ற பாதுகாப்பான அமைப்புக்குள்ளிருந்துகொண்டு அதில் காலத்தால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை செப்பனிட்டு சரிசெய்து கொள்வதும், புதிய தலைமுறையின் மாற்றங்களைப் பாரம்பரிய நெறிமுறைகளோடு எதிர்கொள்வதும் மட்டுமே தீர்வு. என்னுடைய விருப்பம் என்பதைத் தாண்டி, நம்முடைய வருங்காலம் என்று நம் பார்வையை விசாலப்படுத்திக் கொண்டால் இருபாலரின் வாழ்வோடு அவர்கள் குழந்தைகளின் வாழ்வும் சிறக்கும்.

**கோதை ஜோதிலட்சுமி**

# ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் போராட்டம்; பொலிஸார் குவிப்பு




(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தை திறந்துவைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விஜயம் செய்த நிலையில் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து காணாமலாக்கப்பட்ட உறவுகளால் போராட்டமொன்று நேற்று (11) முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்துக்கு ஜனாதிபதி சென்றிருந்த நிலையில், கறுப்புக் கொடிகளுடன் வருகை தந்த காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பல்கலைக்கழகம் முன்பாக சென்று போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர்.

இதன்போது பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பம்பைமடு சோதனைச்சாவடிப் பகுதியில் வைத்து பல்கலைக்கழகப் பகுதிக்கு செல்ல முடியாதவாறு காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தடுத்துநிறுத்தப்பட்டனர்.

இதன்போது காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் பொலிஸ் தடுப்பை உடைத்துச் செல்ல முற்பட்டமையால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. இதன்போது, "காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி வேண்டும், போர்க்குற்றவாளியை சர்வதேச நீதிமன்றில் நிறுத்து, சர்வதேச விசாரணையே தேவை" என அவர்கள் கோஷம் எழுப்பியதுடன், பொலிஸாருடன் கடும் தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

இதன்போது, "எமது உறவுகள் காணாமல் போகவில்லை. காணாமலாக்கப்பட்டார்கள். நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள் இல்லையா, நடமாடுவதற்கான சுதந்திரம் எமக்கில்லையா, எங்களை மட்டும் எப்போதுமே எதற்காக தடுக்கிறீர்கள். நாங்கள் பயங்கரவாதிகளா, எமக்கு எப்போதுமே கம்பிவேலி பிரயோகம்தானா?" என்று பொலிஸாரை பார்த்து அவர்கள் கேள்வி எழுப்பினர்.

கொலைக் குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதியாக இருக்கிறார். அவர்களை நம்பியே நாம் எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். எனவே, அவரிடம் நாம் சில கேள்விகளை கேட்கவேண்டும். அதற்கு அனுமதி வழங்குமாறு போராட்டக்காரர்கள் தெரிவித்தபோதும் அதனை பொருட்படுத்தாத பொலிஸார் அவர்களை முன்செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

போராட்ட இடத்துக்கு பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன், சம்பவ இடத்தில் வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் கலகமகே ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இதனையடுத்து ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரியொருவர் வருகை தந்து, குறித்த போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியதுடன், இருவரை மாத்திரம் வந்து ஜனாதிபதியை சந்திக்குமாறு கோரினர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர்கள் நாம் அவரை சந்திக்க வரவில்லை. எங்கள் அனைவரையும் முன்செல்ல அனுமதியுங்கள் எனக் கோரியதுடன், கொலைக்குற்றவாளி எப்படி நீதிபதியாக மாறமுடியும் - என்றனர்.

இருமணிநேரத்துக்கும் மேலாக குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்து முன்செல்ல முடியாதவாறாக நின்றனர். இந்நிலையில், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கதறி அழுது கோஷமிட்டனர். அதில் ஒருவர் மயங்கி விழுந்ததையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேறி சென்றிருந்தனர்.

இதன்போது வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியின் கட்டளைக்கிணங்க, பாதுகாப்புக் கடமையில் நின்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மயங்கி வீழ்ந்த பெண்ணிற்கு தண்ணீர் வழங்கியதுடன் அவரை கைகளினால் பிடித்து முகத்தினை தண்ணீர் ஊற்றி கழுவியும் விட்டார். அத்துடன் சக மற்றுமொரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பைல் மட்டையினை எடுத்து அவருக்கு காற்றும் விசிறிக்கொண்டிருந்தார்.

வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி உடனடியாக அவசர நோயாளர் சேவை பிரிவுக்கு தகவல் வழங்கி அன்பியூலன்ஸை வரவழைத்ததுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு தனது வாகனத்தில் இருந்த தண்ணீர்ப் போத்தல்களையும் வழங்கினார். மேலும் போராட்டம் நிறைவுற்றதும் அவர்களுக்கு கொரோனா தொற்று நீக்கி மருந்தும் (சனிஸ்டேசர்) வழங்கினார்.

வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியின் கீழ் செயற்படும் பொலிஸாரின் இம்மனிதாபிமான செயற்பாடுகள் அங்கிருந்தவர்களின் மனதை நெகிழச்செய்யும் வகையில் அமைந்திருந்தது.

## 11.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 2861 | 035 2268 |
| கனேடியன் டொலர் | 043 5735 | 05 424 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 525 | 20 7860 |
| யூரோ | 115 827 | 123 5616 |
| ஜப்பான் யென் | 0 6 8 | 0 6536 |
| சிங்கப்பூர் டொலர் | 036 07 | 040 8145 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 5458 | 165 005 |
| சுவிஸ் பிராங்க் | 101 8740 | 11 4363 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 6482 |
| குவைட் | குவைட் தினார் | 556 5471 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 5574 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3682 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7312 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8841 |

# நாடாளுமன்ற சார சங்ஹிதா புலமை இலக்கிய நூல் பிரதமரிடம் கையளிப்பு



நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சார சங்ஹிதா புலமை இலக்கிய நூலின் இரண்டாம் பதிப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று (11) நாடாளுமன்றத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, பிரதமரிடம் இந்நூலைக் கையளித்ததுடன், நாடாளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகந்த சில்வாவும் இதன்போது கலந்துகொண்டார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வு, கடந்த 08 ஆம் திகதி பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இடம்பெற்றது.

சட்டவாக்க செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி, தேர்தல் முறைமை மற்றும் அதன் திருத்தங்கள், நாடாளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும், பொதுமக்கள் தொடர்பு மற்றும் இலங்கைப் பெண்கள் அரசியலில் புதிய போக்கு ஆகிய பல்வேறு தலைப்புகளில் கல்வித்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களின் கட்டுரைகள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# வறிய மக்களின் நலன்கருதி சோலைவரியில் விசேட விலைக் கழிப்புக் கொள்கை உருவாக்கம்

## அமுலுக்கு கொண்டுவர நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

(யாழ்.நிருபர்)

நல்லூர் பிரதேசத்தில் வாழும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் கொள்கை அடிப்படையில் விலைக்கழிவு கொடுப்பதற்கு நல்லூர் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று சபையின் தவிசாளர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இந்நிலையில், பிரதேச சபையின் ஆளுகைக்குள் உட்பட்ட பகுதிகளின் நிலத்தின் பெறுமானம் புதிதாக அளவீடு செய்யப்பட்டுள்ளமையால் அதற்கேற்ப வருமான வரி அறவீட்டிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையால் வறிய மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது என உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனடிப்படையில், இது தொடர்பில் முதலில் கொள்கை உருவாக்கம் ஒன்றை உருவாக்குவதற்கான பொறிமுறையை தவிசாளர் சபையில் பிரஸ்தாபித்திருந்தார்.

அதனடிப்படையில், நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள பகுதியில் வாழும் வறிய மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் விலைக்கழிப்பு அல்லது பரிகாரம் கொடுப்பது சிறந்தது எனவும் விலைக்கழிப்பு செய்வதால் கொரோனா பெருந்தொற்று காரணமாக பொருளாதாரத்தில் பின்நிலையில் உள்ள மக்களது நலன்கள் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பம் வலுவாக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், பிரதேசத்தினை அடிப்படையாக கொண்டு நிலத்தின் பெறுமதி மற்றும் இதர காரணிகளை கொண்டு வரி நிர்ணயிக்கப்படுகின்றது. அந்தவகையில் விலைக் கழிப்புக்கு முன்னர் அது தொடர்பில் ஆராய்ந்து வறிய மக்களது தரவுகளை துல்லியமான ஆராய்ந்து கிராம உத்தியோகத்தரது உறுதிப்படுத்தலுடன் இதை மேற்கொள்ள வேண்டும் எனவும் உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.

இதேநேரம் சபையின் வருமானம் இழக்கப்படாமலும் மக்களின் வாழ்வியலுக்கும் ஊக்குவிப்பதற்குமான திட்டங்களை முன்வைப்பதுமானது பிரதேச சபையினது கடமையாகும் எனவும் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டதுடன், எமது சபையில் இன்றுவரை பல மில்லியன் நிதி அறவிடப்படாது நிலுவையில் உள்ளது. இவற்றை அறவிடுவதற்கான பொறிமுறைகளையும் உருவாக்குவது அவசியம் என்றும் அநேக உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.

அந்தவகையில், முற்றுமுழுதாக சோலைவரி விலைக்கழிப்பை வழங்காது அந்த மக்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு சிறு நிதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கிணங்க, தற்போது நிலப்பெறுமதியின் 08 வீதத்தை வரியாக அறவிடும் நிலை காணப்படுகின்றது. அத்துடன் காலத்துக்கு காலம் அது அதிகரித்தும் செல்கின்றது. எனவே கொண்டுவரப்படும் திருத்தமானது ஒரு சிறு அறவீட்டுடன் மேற்கொள்ளப்படுவதே சிறந்தது எனவும் உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.


அந்தவகையில், சபையில் நேற்றையதினம் பிரசன்னமாகியிருந்த உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையில் தற்போதுள்ள 8 வீத வரி அறவீட்டை இனிவருங்காலத்தில் உறுதிசெய்யப்படும் வறிய மக்களுக்கென கொள்கை ரீதியாக 02 வீதமாக குறைத்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த நடைமுறை அடுத்த மாதம் முதல் இது கொள்கை உருவாக்க அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே பிரதேசத்தில் காணப்படும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கும் அவற்றை தரம் பிரிப்பதற்குமான விசேட பொறிமுறையை உருவாக்குவதனூடாகவே அதை மேற்கொள்வதில் வெற்றிபெற முடியும் என உறுப்பினர் ஒருவரால் முன்மொழிவொன்று கொண்டுவரப்பட்டது.

இதற்கிணங்க, திண்மக்கழிவு தரம்பிரித்து அகற்றுவதற்கான பொறிமுறையாக முன்பள்ளிகளில் இருந்து ஆரம்பிப்பது என்றும் சிறுவர்களுக்கு இத்தகைய விழிப்புணர்வுகளை புகட்டுவதனூடாக அதை வெற்றிக்கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கும் இடங்களில் இருந்து இந்த விழிப்புணர்வுகளை முன்னெடுத்தால் எதிர்காலத்தில் அது வெற்றிபெறும் சாத்தியக்கூறுகளும் அதிகமாக காணப்படுகின்றன.

இதன் அடுத்த கட்டமாக முன்பள்ளிகளிலிருந்து பாடசாலைகளுக்கு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் அவசியம் என்றும் பாடசாலைகளிலும் அந்த நடைமுறையை சுகாதார உத்தியோகத்தர்கள் ஊடாக சபையின் சுகாதார பிரிவினரும் இணைந்து பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இவ்வாறு மாணவர்கள் மத்தியில் இந்த திண்மக் கழிவகற்றல் மற்றும் வகைப்படுத்தலில் பொறிமுறையை முன்னெடுத்துச் சென்றால் அதன் இலக்கை எதிர்காலத்தில் இலகுவாக வெற்றிக்கொள்ள முடியும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# போலி தடுப்பூசி அட்டைகள்: சுகாதார அமைச்சு எச்சரிக்கை

இலங்கையர்கள் கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசி ஏற்றிக்கொள்வதைத் தவிர்க்க போலி தடுப்பூசி அட்டைகளைப் பயன்படுத்துதல் தொடர்பில் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு பணிப்பாளர் மற்றும் கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி, வைத்தியர் அன்வர் ஹம்தானி இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றப்பட்ட அனைவரின் தகவல்களும் சுகாதார அமைச்சகத்திடம் உள்ளன. மேலும், தடுப்பூசி ஏற்றிக்கொள்வதைத் தவிர்ப்பது ஒரு பயனற்ற முயற்சியாகும்.

மேலும், தடுப்பூசி ஏற்றிக்கொள்வதானது ஒவ்வொருவரினதும் சமூகப் பொறுப்பாகும், எனவே, அனைவரும் கொரோனா தொற்றுப்பரவலுக்கு எதிராக தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களால் நுவரெலியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்








(செ.திவாகரன், நுவரெலியா நிருபர்)

சுகாதார தொழிற்சங்க ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று (11) 05 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

பதவி உயர்வு, இடர்கால கொடுப்பனவு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குமாறுகோரி, நுவரெலியா மாநகர சபை மண்டபத்தில் இருந்து (சினிசிட்டா) ஆரம்பித்த ஊர்வலம் நுவரெலியா புதியக்கடை பாதையூடாக பிரதான பஸ் நிலையம் வரை வருகைத்தந்து போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இப் போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரத் தொழிற்சங்க ஊழியர்கள் பல்வேறு கோஷங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இப்போராட்டத்தில் தாதியர், துணை மருத்துவ பணியாளர்கள் மற்றும் மருத்துவப் பொருட்கள் விநியோக சேவை ஊழியர்கள் என 700 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு தீர்வை வழங்குமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டம் காரணமாக நுவரெலியா பிரதான நகரப் பகுதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உடனடியாக நஷ்டஈடு வேண்டும்

## சிறு தோட்ட உரிமையாளர்கள் கோரிக்கை

(மாத்தளை நிருபர்)

மாத்தளை மாவட்ட சிறு தேயிலை தோட்டச் செய்கைக்காக தேவையான பசளை வகைகள் இல்லாததன் காரணமாக சிறு தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் இதனால் தமது அன்றாட வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட தங்களுக்கு அரசு உடனடியாக நஷ்டஈடுகளை வழங்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது, தேயிலை உற்பத்திக்கான ஒரு மூடை பசளை ஆயிரத்து 500 ரூபா தொடக்கம் 8 ஆயிரத்து 500 ரூபா வரை விற்கப்படுவதால் இவ்வளவு ஒரு பாரிய தொகைக்கு பசளையை கொள்வனவு செய்து தங்களால் சிறு தேயிலை தோட்டச் செய்கையில் ஈடுபட முடியாது என சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தங்களது எதிர்கால வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் தங்களுக்கு அரசு நஷ்ட ஈட்டை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் இறத்தோட்டை, உக்குவளை, அம்பங்கங்க, கோரளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் சுமார் 02 ஆயிரம் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் இருப்பதாகவும், அவர்கள் சுமார் 03 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை உற்பத்தியை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தற்போது நாட்டில் நிலவுகின்ற இறுக்கமான நிலைக்கு மத்தியில் தேயிலை கொழுந்துக்காக வழங்கப்படும் விலை தமது முயற்சிக்கு ஏற்றதாக இல்லை எனவும், இதனால் எமது தொழிலை கைவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தங்களுக்கு கீழ் பணிபுரியும் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பினை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் அரசு உடனடியாக சிறு தேயிலை தோட்ட உற்பத்திகள் மீது உடனடி கவனம் செலுத்தி தங்கள் தொழிலுக்கு நல்லது நடக்க வழிவகுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றனர்.

# சட்டவிரோத கட்டிட நிர்மாணங்களால் இயற்கை நீர்வளங்களுக்கு பாதிப்பு

(மாத்தளை நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் இருக்கும் இயற்கை நீர் வளங்களுக்கு அருகில் சட்டவிரோத கட்டிட நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதால் மேற்படி இயற்கை நீர் வழங்கள் முற்றிலும் வற்றிப்போகக்கூடிய ஓர் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட பணிப்பாளரும் சூழகவியலாளருமான காமினி ஜயதிஸ்ஸ தெரிவிக்கின்றார்.

இது குறித்து கருத்து தெரிவித்த அவர்,

மாத்தளை மாவட்ட மக்கள் தங்களது குடிநீர் தேவையை நிறைவேற்றிக்கொள்ள இயற்கை நீர் வளங்களை மையமாகக் கொண்டு தோண்டப்படும் கிணறுகள் மூலமாக சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்கின்றனர். இதேவேளை சிலர் தங்களது குடிநீர் தேவைகளுக்காக வேண்டி குழாய்நீர் வசதிகளை ஏற்படுத்தி கொண்டுள்ளதாகவும் மேற்படி இயற்கை நீர் வளங்களை மையமாக வைத்து கிராமிய நீர்விநியோகத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் சிலர் சிறுதொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்குடன் குடிநீர் அடைக்கப்பட்ட போத்தல்கள் உற்பத்திகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு சில மனிதாபிமானமற்ற சுயநலவாதிகளின் செயல்கள் காரணமாக இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கட்டிட நிர்மாணப் பணிகள் காரணமாகவும், தேவையற்ற முறையில் காடழிப்புகளை மேற்கொள்ளுவதாலும் இந்த இயற்கை நீர் வளங்கள் முற்றாக அழிந்து வருவதை அவதானிக்க முடிகிறது என தெரிவிக்கும் காமினி ஜயதிஸ்ஸ, இம்மாவட்டத்தில் சிலர் காணி விற்பனைகளில் ஈடுபட்டு குறிப்பிட்ட காணிகளை பத்து அல்லது 15 பர்ச்சஸ்களாக பிரித்து விற்பனை செய்யும் போது அங்கே இயற்கை நீர் வளங்கள் முற்றாக பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

மாத்தளை மாநகருக்கு நீர் விநியோகம் செய்யும் சுதுகங்கைக்கு அருகாமையில் இவ்வாறான சட்ட விரோத செயல்கள் இடம்பெறுவதால் சுது கங்கைக்கு இருமருங்கிலும் இருக்கும் நீர் ஊற்றுகள் வற்றிப்போகக்கூடிய ஆபத்தான நிலைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

# தூதுவர் அம்சா வளைகுடா ஒத்துழைப்பு பேரவையின் பொதுச் செயலாளருடன் சந்திப்பு



சவூதி அரேபிய இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் பி.எம். அம்சா, வளைகுடா ஒத்துழைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம் கலாநிதி நயீப் பலாஹ், எம்.அல்-ஹஜ்ரப்பை ரியாத்தில் உள்ள பேரவையின் தலைமையகத்தில் வைத்து சந்தித்தார்.

சுமுகமான இந்த சந்திப்பின்போது, வளைகுடா ஒத்துழைப்புப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே வர்த்தகம், வேலைவாய்ப்பு, சுற்றுலா மற்றும் முதலீடுகளை விரிவுபடுத்துவது முதலான பரஸ்பர நலன்கள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர்.

இலங்கை மற்றும் வளைகுடா ஒத்துழைப்புப் பேரவையின் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தும்நோக்கில், இலங்கைக்கும் வளைகுடா ஒத்துழைப்புப் பேரவைக்கும் இடையே கட்டமைப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் தூதுவர் மற்றும் செயலாளர் நாயகம் ஆராய்ந்தனர்.

# ஊழியர் சேமலாப நிதி - நம்பிக்கை நிதியம் தொடர்பில் உரிய தரப்புடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

## இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் சலோபராஜா

(பதுளை நிருபர்)

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் விடயங்களில், அரசு தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ளாமல், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமே ஆரோக்கியமானதோர் சூழல் ஏற்படுமென்று, இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் இரா. சலோபராஜா குறிப்பிட்டார்.

பதுளைப் பகுதியின் மாப்பாகலை பெருந்தோட்டப் பிரிவின் வெலிபிஸ்ஸ சனசமூக நிலையத்தில் நேற்று (11) நடைபெற்ற பெருந்தோட்டப்பகுதி முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலின்போதே, இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் இதனை மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்,

ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அரசு 65 பில்லியன் ரூபா நிதியினை வரியாக பெறவுள்ளமை அறிந்து, ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவோர் பெரும் அதிர்ச்சி கொண்டுள்ளனர். அரசு இது விடயத்தில் தமது முடிவை மாற்றிக் கொள்ளல் வேண்டும். தவறின் அரசுக்கு எதிராக பாரிய போராட்டங்களை நடத்த வேண்டிய நிலை உருவாகும். ஊழியர் சேமலாப நிதியில் 25 வீதப் பகுதியை வரியாக அரசு கையகப்படுத்தவுள்ளதான தகவல்கள் வெளியாகியுள்ளன. இத் தகவல்கள், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் செலுத்துவோருக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

விசேடமாக பெருந்தோட்டங்களை மையப்படுத்தி தொழில் புரியும் எமது மக்கள், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மீது அதிக எதிர்பார்ப்புகளுடன் இருந்து வருகின்றனர். இவ் எதிர்பார்ப்புகள் இடம்பெறாவிட்டால், அவர்கள் பாரிய பின் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். அம் மக்களைப் பொறுத்தவரையில், தங்கள் வியர்வையை சிந்தி மேற்கொள்ளும் கடின உழைப்பின் ஒரு பகுதியை ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குகின்றனர். தமது ஓய்வுநிலை வயதினை அடைந்ததும், தத்தமது ஜீவனோபாயங்களை கொண்டு செல்ல, இந் நிதியே, அம்மக்களுக்கு கைகொடுக்கின்றது. அவர்களுக்கென்று வேறு எந்தவொரு வருமானங்களும் கிடையாது. விவசாயம் செய்ய காணியோ அல்லது வேறு ஏதாவது ஒரு தொழில் துறையினை மேற்கொள்ளவோ, அவர்களுக்கு



எத்தகைய வாய்ப்புகளும் இல்லாதுள்ளன. ஓய்வு பெற்றப்பின் கூலித் தொழில்களில் ஈடுபடுவதற்கும், அவர்களினால் முடியாதுள்ளன.

மேலும், தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமின்றி, உழைக்கும் அனைத்து தரப்பினருக்கும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் விடயங்களில் அரசு முன்வைத்துள்ள முடிவுகள் பெரும் சவாலாகவே இருந்து வருகின்றன.

ஊழியர் சேமலாப நிதியில் 25 வீதம் என்பது பெருந்தொகையாகும். இப்பணத்தைக் கொண்டு, கிராம சேவைப் பிரிவுகளில் தலா 30 இலட்ச ரூபா என்ற வகையில் அபிவிருத்திப் பணிகளுக்கு செலவு செய்யப்படவிருப்பதாகவும் அறிய முடிகின்றது. அத்துடன் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியில் வருட இறுதியில் வட்டியாக வரவிடப்படும் தொகையில் ஐந்து வீதம் முதல் எட்டு வீதம் வரையிலான பணத்தை, இவ் நிதியங்களில் இருந்து கையகப்படுத்த அரசு முயற்சிப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

இது விடயத்தில் தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு உடன்பாடுகள் இல்லையென்றும் கூறப்படுகின்றது. எமது நாட்டின் பிரதமராக இருந்த அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் காலத்திலேயே அவரது எண்ணக் கருத்துக்கமைய, ஊழியர் சேமலாப நிதி திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அக்காலப் பகுதியில் தொழிலாளர் சமூகத்தினர் இத்திட்டம் குறித்து சிரத்தை காட்டாமல் இருந்து வந்தனர். காலப் போக்கில் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தினை, தொழிலாளர் சமூகத்தினர் முழுமையாக ஏற்றுக்கொண்டு, அதன் பங்குதாரர்களாக இருந்து வருகின்றனர். இத்திட்டத்தின் பெறுமதியை பெருந்தோட்ட மக்கள் தற்போது பூரணமாக அறிந்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் மூலம், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு நன்மைகளையும் பயன்களையும் பெற்று வருகின்றனர். வீட்டுக்கடன், குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்வதோடு, ஊழியர் சேமலாப நிதியின் மொத்த தொகையில் 30 வீதம் என்ற வகையில் வட்டி இல்லாமல் பெற்றுக்கொள்வதுடன், ஏனைய கடன்களையும் பெற்று, வாழ்வாதார மேம்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், வீடுகளுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள், நாகரீகப் பொருட்கள், கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சி, வாகனங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதுடன், தமது பெற்றோரின் ஊழியர் சேமலாப நிதி மூலம், அவர்களின் பிள்ளைகளும் தமது மேற்படிப்புக்காக பெரும் பயன்களை அடைந்த வண்ணமுள்ளனர். குறிப்பாக இந்நிதி மூலமே, பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தினர், ஏனைய சமூகத்தினருக்கு நிகராக வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் கூறலாம்.

இந்நிலையில், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மீது அரசு கை வைப்பதானது, பாரிய பாதிப்புகளை பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகம் எதிர்நோக்க வேண்டி ஏற்படும். தற்போதைய நிலையிலேயே, அம்மக்கள் எமது பணத்துக்கு என்ன நடக்குமோ என்று ஏக்கப் பெருமூச்சு விடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஆரம்பக் காலக்கட்டத்தில் தொழில் தருனர்கள் நூற்றுக்கு ஐந்து வீதமும் தொழில் செய்வோர் மூன்று வீதமும், ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்தும் முறைமை சட்டமாக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் தொழில் தருனர்கள் நூற்றுக்கு பன்னிரண்டு வீதமும், தொழில் செய்வோர் எட்டு வீதமும் என்றடிப்படையில் ஊழியர் சேமலாப நிதிக்கு செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகிய விடயங்களில் அரசு கை வைக்கும் பட்சத்தில், அரசு பாரிய எதிர் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். இதனை முன்னிலைப்படுத்தி, மேற்கொள்ளும் மக்கள் போராட்டத்தை, தற்போதைய நிலையில் அரசினால் தாக்குப்பிடிக்க முடியாது போகலாம். ஆகவே, அரசு ஊழியர் சேமலாப நிதியில் கை வைப்பதை உடன் நிறுத்திக்கொள்ளல் வேண்டும். அது விடயத்தில் அரசு மறுபரிசீலனை செய்து, ஊழியர் சேமலாப நிதியில் கைவைப்பதை நிறுத்திக் கொள்ளல் வேண்டும் என்றார். மற்றும் பலரும், அரசின் இத் திட்டத்தை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

# வீடுகளில் சிகிச்சைபெறும் கொரோனா நோயாளர்கள் உரிய சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்

## ஓமிக்ரொன் ஆபத்து குறித்து சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை

ஓமிக்ரொன் திரிபு நாட்டில் மிக வேகமாக பரவி வருவதினால், இந்நோய்த் தொற்றுக்குள்ளாகி வீடுகளில் சிகிச்சை பெறுவோர் நோய் நிலைமை மோசமடையாதிருக்க உரிய நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று உடல் நல சிகிச்சை நிபுணர் சரத் காமினி டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தவறான அறிவுரைகளால் நோய் நிலைமை மோசமடைகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு என்றும் சுட்டிக்காட்டினார்.

ஓமிக்ரொன் நோயின் சில அறிகுறிகள் மாறுபட்டவை. இந்த அறிகுறிகள் பொதுவான வைரஸ் காய்ச்சல் அறிகுறிகளைப் போன்றதாக இருக்கக்கூடும். காய்ச்சல், தொண்டை வலி, இருமல், உடல்வலி மற்றும் சோர்வு போன்ற பொதுவான அறிகுறிகள் காணப்படும். இந்த நிலைமை ஏனைய நோய் ஏற்பட்டால் அதிலிருந்து எவ்வாறு நாம் வழமை நிலைமைக்கு திரும்புகின்றோமோ அதேபோன்ற நிலைமை இதிலும் ஏற்படக்கூடும்.

முக்கியமாக ஓய்வெடுப்பது இதற்கு மிகவும் அவசியம். நோய் நிலைமை காணப்படுமிடத்து, கடினமான வேலைகளில் ஈடுபடாமலும் அங்குமிங்கும் அலைந்து திரியாமலும் ஓய்வாக இருப்பது அவசியம். முடிந்தவரை அதிகளவான நீர் ஆகாரங்களை உணவுக்கு பதிலாக சேர்த்துக்கொள்ள வேண்டும். வயதானவர்கள் வழமையைவிட நாளொன்றுக்கு ஆகக்குறைந்தது இரண்டு லீற்றர் நீர் ஆகாரத்தையேனும் உண்ண வேண்டும். இந்த நோய்க்கு விசேட உணவு வகைகளை உட்கொள்ளத் தேவையில்லை. வழமைபோன்று பொதுவான உணவு வகைகளை உட்கொள்வது போதுமானது. பெரும்பாலானவர்களுக்கு தொண்டை வலி இருப்பதால் ஒரு கிளாஸ் தண்ணீரில் அளவான உப்பை சேர்த்து ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை வாய் கொப்பளிக்க வேண்டும்.

மருந்து வகைகளை பயன்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். உடல் வலிகளுக்கு பெரசிட்டமோல் மிகவும் பொருத்தமான மருந்து. சிலர் இதற்காக பெரசிட்டமோல் (Paracetamol) மற்றும் கோடீன் (Codeine) ஆகிய இரண்டு மருந்துகளும் அடங்கிய டீன் என்று முடிவடைகின்ற ரெப்பிடீன், பெனடீன் ஆகிய மருந்து வகைகளை பயன்படுத்துகின்றனர். பெரசிட்டமோலை பயன்படுத்தியும் காய்ச்சல் மற்றும் உடல்வலி குறைவடையாதபட்சத்தில் மாத்திரமே இவ்வாறான Codeine அடங்கிய மருந்து வகைகளை பயன்படுத்த வேண்டும். Codeine சில அடங்கிய வகை சிலருக்கு மலச்சிக்கல் மற்றும் தூக்கத்தை ஏற்படுத்துகின்றன. சளி இருந்தால் பிரிட்டன் மாத்திரை ஒன்றை எடுத்தால் போதுமானது. விற்றமின் சி, விற்றமின் டி மற்றும் துத்தநாக மருந்து வகைகள் Zinc drugs போன்ற மாத்திரைகள் இந்த நோய்க்காக பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை. மற்றும் அவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் மருந்தாகும்.

ஓமிக்ரொன் தொற்றினூடாக நோய் நிலைமை குறைவாக காணப்படுகின்றவர்களுக்கு Prednisolone வகையிலான மாத்திரைகள் அதாவது, Steroids மற்றும் Antibiotics ஆகியவற்றை பயன்படுத்துவது அவசியம் இல்லை. நோய் தாக்கம் அதிகமாக உள்ளவர்களுக்கே இந்த மருந்து வகைகள் அவசியமாகும். வீட்டிலேயே சிகிச்சை பெற்று வந்தாலும், தொடர்ந்தும் அதிக காய்ச்சல், வாந்தி அல்லது உணவு உண்பதில் சிரமம் காணப்படுமிடத்து மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியமாகும். தொற்றா நோய் உள்ளவர்கள், அதற்காக முன்னர் பயன்படுத்திய மருந்து வகைகளை தொடர்ந்தும் பயன்படுத்துவது மிகவும் அவசியம் என்றும் உடல் நல சிகிச்சை நிபுணர் சரத் காமினி டி சில்வா மேலும் தெரிவித்தார்.





இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளை மற்றும் கண்டி அஞ்சனை இந்து சேவா சமித்தி என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த சுவாமி விவேகானந்தரின் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் 125ஆவது ஆண்டு நினைவு விழா கண்டியில் இடம் பெற்றது. (படங்கள் : கண்டி நிருபர்)

# ‘இலங்கையின் சுவை’ உற்பத்தி – உணவு சந்தை டோஹாவில் இலங்கைத் தூதரகத்தினால் அறிமுகம்







கட்டார் நாட்டில் வசிக்கும் அந்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் மத்தியில் நாட்டின் நற்பெயரை அதிகரிக்கும் நோக்கில், டோஹாவிலுள்ள இலங்கைத் தூதரகம், லுலு குழுமத்துடன் இணைந்து, இலங்கையின் சுவை, இலங்கை கைத்தறி மற்றும் பட்டிச்சேலை விழா என்ற தலைப்பில் பன்முக இலங்கை ஊக்குவிப்பு நிகழ்வை ஆரம்பித்தது.

இது தொடர்பில் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் 74ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களை முன்னிட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டோஹாவில் உள்ள டி-ரிங் ரோட்டில் உள்ள லுலு ஹைப்பர் மார்க்கெட்டில், லுலு குழுமத்தின் பணிப்பாளர் கலாநிதி மொஹமட் அல்தாஃப் முஸ்லியம் வீட்டில், கத்தார் அரசிற்கான இலங்கைத் தூதுவர் மஃபாஸ் மொஹிதீன் ஆகியோர் இந்நிகழ்வை கடந்த 06 திகதி தொடங்கி வைத்தனர். பெருநிறுவனத் தலைவர்கள் மற்றும் வர்த்தகர்கள், இலங்கையிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்பவர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பெருமளவிலான அழைப்பாளர்கள் மற்றும் விருந்தினர்கள் விழாவில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வு கத்தாரில் உள்ள அனைத்து 17 லுலு ஹைப்பர்மார்க்கெட் ஸ்டோர்களிலும் இன்றுவரை காட்சிப்படுத்தப்படும். லுலு குரூப் இன்டர்நெஷனல் ஆசியாவின் மிகப்பெரிய சில்லறை சங்கிலிகளில் ஒன்றாவதுடன், மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் மிகப்பெரியதுமாகும்.

இந்த ஒரு வார கால இலங்கை உற்பத்திகள் மற்றும் உணவு சந்தையானது, இலங்கையிலிருந்து பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட பலதரப்பட்ட புதிய மரக்கறிகள், பழங்கள், ஊக்குவிப்பு விலையில் வழங்கப்படும் பல்வேறு வகையான புதிய மரக்கறிகள், பழங்கள் ஆகியவற்றுடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்குகின்றது.

இந்த ஆண்டு நிகழ்வில் கறுவாவுடன் கூடிய கித்துல் மா, பாதுகாக்கப்பட்ட உணவுப் பொருட்கள், உண்மையான சுவையூட்டிப் பொருட்கள், பல்வேறு வகையான பிஸ்கட்கள் மற்றும் தின்பண்டங்கள் போன்ற பல புதிய தயாரிப்புக்கள் மற்றும் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டுள்ளன. தேங்காய் கிரீம், தேங்காய் பால் மற்றும் குளிர்ந்த அழுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய் போன்ற ஆரோக்கியமான இயற்கை தேங்காய் தயாரிப்புக்களின் பல வகைகள் தள்ளுபடி விலைகளுடன் காட்சிப்படுத்தப்பட்டன. இலங்கையைச் சுற்றியுள்ள தோட்டங்களில் இருந்து மஞ்சள், கெமோமைல் மற்றும் ஏனைய மூலிகைகளுடன் கூடிய பல்வேறு வகையான தேயிலை மற்றும் தேயிலை அடிப்படையிலான மூலிகைத் திரவியங்களும் நிகழ்வில் சந்தைப்படுத்தப்பட்டன.

பிரித்தானிய, டச்சு மற்றும் போர்த்துக்கேய மற்றும் இந்திய (குறிப்பாக தென்னிந்திய) தாக்கங்களுடன் பான்-ஆசியன் போன்ற பல காலனித்துவத் தாக்கங்களின் கலவையான இலங்கையின் தனித்துவமான சமையல் பாரம்பரியத்தை உயிர்ப்பிப்பதை இந்த நிகழ்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொடக்க விழாவில் காட்சிப்படுத்தப்பட்ட உண்மையான இலங்கை உணவு வகைகளால் அழைக்கப்பட்டவர்கள் பலர் பெரிதும் ஈர்க்கப்பட்டனர்.

இந்நிகழ்வின் மற்றொரு முக்கிய ஈர்ப்பு இலங்கை கைத்தறி மற்றும் பத்திக்சேலை விழா ஆகும். 2021 ஒக்டோபரில் கட்டாருக்கு விஜயம் செய்திருந்த பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் மற்றும் லுலு குழுமத்துடன் தூதுவர் மொஹிதீன் நடத்திய கலந்துரையாடலின் விளைவாக இலங்கை கைத்தறி மற்றும் பத்திக் புடவைகளை மேம்படுத்தும் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை கைத்தறி மற்றும் பத்திக் புடவைகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த கைவினைப்பொருட்கள் ஆகியவை இந்த கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த முயற்சியானது உள்ளூர் கைத்தறி மற்றும் பத்திக் உற்பத்தியாளர்கள் பயன்படுத்தப்படாத வெளிநாட்டு சந்தைகளை அணுகுவதை நோக்கமாகக் கொண்ட, அதே நேரத்தில் ஏற்றுமதிக் கூடையை அதிகரிக்கும்.

கட்டார் அரசில் வர்த்தகம், சுற்றுலா மற்றும் கலாசார மேம்பாட்டை ஊக்குவிப்பதில் ஒரு முன்னோடியாக இந்த நிகழ்வில் இலங்கை பங்கேற்பதற்கு தூதரகம் உதவியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சமூக ஆர்வலர் சபாநாதனின் ஏற்பாட்டில் கனடா வாழ் சுரேன் தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அறம் பழகு அறக்கட்டளை ஆகியவற்றின் ஊடாக நாவற்குழி 300 வீட்டுத்திட்டம் பகுதியில் அமைந்துள்ள அரும்புகள் முன்பள்ளி சிறார்களுக்கு நேற்று முன்தினம் பாதணிகள் வழங்கப்பட்டன. (சாவகச்சேரி நிருபர்)

# தனமல்வில கொள்ளைச் சம்பவம் சந்தேக நபர்கள் இருவர் கைது

## மற்றுமொருவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் தீவிரம்



**(கெலும் குணதிலக்க)**

தனமல்விலவில் துப்பாக்கிகள் மற்றும் வாள்களுடன் மரக்கறி விற்பனை நிலையத்தினுள் கடந்த ஞாயிறன்று (06) புகுந்து 05 இலட்சத்துக்கும் அதிகமான பணம் கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனமல்வில - வெல்லவாய வீதியில் தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலஹருவ சந்தியில் அமைந்துள்ள காய்கறி விற்பனை நிலையத்தினுள்ளேயே திருடர்கள் நுழைந்து கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டனர்.

மூன்று கொள்ளையர்கள் துப்பாக்கிகள் மற்றும் வாள்களுடன் கடை ஒன்றுக்குள் நுழைந்து கொள்ளையடிக்கும் காட்சி கண்காணிப்புக் கெமராக்களில் பதிவாகியுள்ளன.

துப்பாக்கி மற்றும் வாள்களுடன் கடைக்குள் நுழைந்த கொள்ளையர்கள், உரிமையாளரை மிரட்டி பணம் மற்றும் உரிமையாளர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று கொள்ளையர்களால் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும், வர்த்தக நிலையத்தில் இருந்த 05 இலட்சத்துக்கும் அதிகமான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தனமல்வில பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# காரைநகர் – ஊர்காவற்றுறை பாதை பழுது; பயணிகள் அவதி!



**(யாழ். நிருபர்)**

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பாதை கடந்த மூன்று தினங்களாக சேவையில் ஈடுபடாமையால் பெரும் இடர்பாடுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

குறிப்பாக, ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை நீதிமன்று, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை போன்றவற்றில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதையின் வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளமையாலேயே சேவை நிறுத்தப்பட்டுள்ளது என காரணம் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பாதையில் கேபிள் அறுந்துபோதல், வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைதல் போன்ற சம்பவங்கள் கடந்த காலங்களில் அடிக்கடி இடம்பெற்றன.

எனினும், பின்னர் புதிய கேபிள் இணைக்கப்பட்டு அண்மைக்காலமாக தடையின்றி சேவை இடம்பெற்றது.

இரு வெளியிணைப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, ஒன்று பழுதடைந்தால் மற்றையதை பயன்படுத்தும் நடைமுறை பின்பற்றப்பட்டது.

ஆனால், தற்போது பொருத்தப்பட்டிருந்த ஒரு வெளியிணைப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளது எனக் கூறி மூன்று தினங்களாக பாதை சேவையில் ஈடுபடாமல் உள்ளது.


அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் தற்காலிகமாக ஒழுங்குபடுத்தப்பட்ட மோட்டார் படகில் ஆபத்துகளுக்கு மத்தியில் தினமும் பயணம் செய்கின்றனர்.

எனவே, பாதையின் சீரான சேவைக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

காரைநகரிலிருந்து 5 நிமிடங்களில் பாதையில் ஊர்காவற்றுறைக்கு செல்லக்கூடியவர்கள் குறித்த பாதை சேவை தடைப்பட்டிருப்பதனால், காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு செல்ல வேண்டும். இதனால் அவர்கள் சுமார் 45 கிலோமீற்றர் தூரம் சுற்றி செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீ சத்ய சாய் சர்வதேசப் பாடசாலையில் 2022இற்கான புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு நேற்று (11) பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது. (படங்கள் : தலவாக்கலை நிருபர்)






# மன்னாரில் பூஸ்டர் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு



**(மன்னார் நகர் நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான சினோபார்ம் முதல் மற்றும் இரண்டாம் தடுப்பூசி அதேநேரம் இரண்டு தடுப்பூசிகளை பெற்று மூன்று மாதம் நிறைவடைந்தவர்களுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் இராணுவத்தினரின் நெறிப்படுத்தலில் நேற்று வெள்ளிக்கிழமை பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக் குட்பட்ட பகுதிகளில் கடந்த ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்றவர்களுக்கும் அதேநேரம் தடுப்பூசிகளை பெறாதவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அதன் ஒரு பகுதியாக மன்னார் பஸ் நிலையத்திலும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், இராணுவத்தினர் மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவானவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தடுப்பூசிகளை பெற்றுவருகின்றனர்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக 14ஆவது பட்டமளிப்பு விழாவின் இறுதிநாள் நிகழ்வு






(நூருல் ஹுதா உமர், சலீம் றமீஸ்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றன. மூன்று அமர்வுகளாக இடம்பெற்ற இந்நிகழ்வின் முதல் இரு அமர்வுகள் முகாமைத்துவ வர்த்தகப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா எம்.ஜி.ஹஸன் தலைமையில் இடம்பெற்றது.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் வழிகாட்டலின்கீழ் விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் காமினி சேனாநாயக்க இறுதிநாள் நிகழ்வுக்கான பிரதான உரையை நிகழ்த்தினார். இங்கு முதல் நிகழ்வாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஜௌபர் சாதிக்கிற்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பின்னர் முகாமைத்துவ வர்த்தகப் பீடத்தினைச் சேர்ந்த 625 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இதில் 23 பேர் வியாபார நிர்வாக முதுமானிப் பட்டங்களையும், 2 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்படிப்பின் டிப்ளோமாவுக்கான பட்டங்களையும், எம்.ஐ.பாத்திமா பஷீலா 2013/2014ஆம் ஆண்டுக்கான சிறந்த மாணவருக்கான அல்-ஹாஜ் இப்றாலைப்பே ஞாபகார்த்த விருதினையும், ஏ.என்.பாத்திமா சைனப் குறித்த ஆண்டின் வர்த்தகப் பிரிவின் சிறந்த மாணவருக்கான அல்-ஹாஜ் இஸ்மாயில் ஞாபகார்த்த விருதினையும் பெற்றுக்கொண்டதுடன், ஆர்.பாத்திமா றாஜி 2014/2015ஆம் ஆண்டுக்கான சிறந்த மாணவருக்கான அல்-ஹாஜ் இப்றாலைப்பே ஞாபகார்த்த விருதினையும் டபிள்யூ.ரீ.டிலானி வீரசிங்க 2014/2015ஆம் ஆண்டுக்கான வர்த்தகப் பிரிவின் சிறந்த மாணவருக்கான அல்-ஹாஜ் இஸ்மாயில் ஞாபகார்த்தபெற்றுக்கொண்டனர்.

இதே தினத்தில் இடமெற்ற இறுதி அமர்வு கலை, கலாசார பீடத்தில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் மற்றும் முகாமைத்துவ வர்த்தகப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா, எம்.ஜி.ஹஸன் ஆகியோரது தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் குறித்த இரு பீடங்களிலும் கல்விகற்ற 312 வெளிவாரி மாணவர்கள் தமது பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

14ஆவது பட்டமளிப்பு விழாவில் வெளிவாரி கற்கைப் பிரிவில் கல்வி கற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஏ.ஆர். ஜிப்ரியா நௌபர், ஜே.எம்.இன்பாஸ், ஏ.எம்.நிகாப், எஸ்.எல்.ஏ.அஹத் ஆகியோரும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் 10ஆம் திகதியுடன் நிறைவுபெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழாவில் பதிவாளர் எச்.அப்துல் சத்தாருடன் இணைந்து, 2621 மாணவர்கள் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸின் கரங்களால் பட்டங்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசி





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான கொவிட்-19 பூஸ்டர் தடுப்பூசி நேற்று முன்தினம் (10) இராணுவத்தினரால் ஏற்றப்பட்டது. பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அரச உத்தியோகத்தர்களுக்காக மாவட்ட செயலகத்தில் ஏற்றப்பட்டிருந்தது.

அக்காலப்பகுதியில் பூஸ்டர் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளத் தவறியவர்கள் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குட்பட்டு குறித்த காலத்தினை கடந்திராத அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான தடுப்பூசியே இராணுவத்தினரால் ஏற்றப்பட்டது.

நாட்டில் கொரோனா பரவல் மேலும் அதிகரித்துவரும் நிலையில் ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானவர்களே அதிகம் இனங்காணப் பட்டுவருவதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் குறிப்பிடுகின்றன. பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை முற்றாக கடைப்பிடிப்பதுடன், பூஸ்டர் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்வதனால் மாத்திரமே கொவிட் மரணங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளமுடியும் எனவும் சுகாதாரப் பிரிவு மக்களை அறிவுறுத்தி வருகின்றது.

இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்களென பலரும் பூஸ்டர் தடுப்பூசியினை ஆர்வத்துடன் ஏற்றிக்கொள்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதுதவிர, மாவட்டத்தின் பல பாகங்களிலும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் கொவிட் தடுப்பூசி ஏற்றிக்கொண்டமைக்கான அட்டை பரிசீலிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

# செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக திருக்குடமுழுக்கு







(ஹறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பட்ஷ மகா கும்பாபிஷேக திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்திவிழா நேற்று (11) நிறைவுற்றது.

வரலாற்றில் முதல் தடவையாக சுவாமி யானையில் ஏறி பவனிவந்தமை குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகப் பெருவிழாவில் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம், நயினைதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான தர்ம ஆதீன ஆகம பிரவீனா ஆசீர்வாத பிரசன்னம் சிவஸ்ரீ ஐ.கைலை வாமதேவ குருக்கள் கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குருவாகப் பணியாற்றினார்.

சுமார் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் இவ்வாலயம் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டதாக ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் சீனித்தம்பி செல்வராசா தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 7ஆம் திகதியன்று ஆரம்பமான விழாவில் தினமும் யாக பூஜைகள் நடைபெற்றன. கடந்த புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெற்றதாக ஆலயத்தின் அறங்காவலர் சபையின் போஷகர் எம்.தவராசா தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கில் நான்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை புனரமைக்க நடவடிக்கை





(பொத்துவில் நிருபர்)

சுபீட்சத்தின் நோக்கு விசேட வேலைத் திட்டத்திற்கமைவாக, கிழக்கு மாகாணத்தில் நான்கு மாதிரி எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் இடர்களுக்கு தீர்வுகாணும் பொருட்டு ஏற்பாடுசெய்யப்பட்ட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (10) மட்டக்களப்பில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்திற் கமைவாக, கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறையை அபிவிருத்திசெய்யும்பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில், அரச கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு கோப்பிறஸ் விற்பனை நிலையங்களை திறந்துவைத்து வருகிறோம்.

அத்துடன், கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பராமரிப்பின்கீழ் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம். அதற்காக எமது கூட்டுறவுச் சங்கங்களின் பராமரிப்பின் கீழுள்ள 27 எரிபொருள் நிலையங்களில், நான்கு எரிபொருள் நிலையங்களை மாதிரி எரிபொருள் நிரப்பு நிலையங்களாக அபிவிருத்தி செய்யவுள்ளோம் என்றார்.

இக்கலந்துரையாடலின்போது, பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதுடன், புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை சக்திமிக்கதாக மாற்றுவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

மத்திய அரசின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அங்கீகாரம்பெற்ற MYCOM நிறுவனத்தினூடாக தொழில்நுட்ப வலையமைப்பை உருவாக்கி எரிபொருள் நிரப்பு நிலையங்கள், கோப்பிறஸ் நிலையங்களின் கணக்குகளை கட்டமைப்பு ரீதியான வலையமைப்பினூடாக, நேரடி கண்காணிப்பிற்கு உட்படுத்தும் வேலைத்திட்டமும் இதன்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெற்றோலியக் கூட்டுத்தாபன மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் கே.கே.ரி.எஸ்.தேவப்பிரிய, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான நளின் மகிகுமார், கலாதேவி உதயராஜா, கந்தையா வடிவேல் தங்கவேல், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





அம்பாறை மாவட்டத்தில் வியாழன் இரவுமுதல் பெய்துவரும் அடைமழை காரணமாக கல்முனை இஸ்லாமாபாத் வீடமைப்புத் திட்டத்தில் நீர்தேங்கி நிற்பதையும் டெங்கு பரவாதிருக்க நீரகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (படங்கள் – நற்பிட்டிமுனை நிருபர்)

## போடியார் புலம்பல்!



பாரதப் பிரதமர் மோடி மார்ச் மாதம் வாராராமே அவர் வந்து இஞ்ச இருக்கிற கேடிகளோட கதச்சித்து போவார்..! சம்பந்தரும் 13ஐ பற்றி சம்பாசனை செய்து படம் காட்டுவார். புறகு பழைய குருடி கதவ திறடி எண்டு பெருமூச்சு விடவேண்டியதுதான். என்ன நான் சொல்லுறது சரி எலுவா..?

# கப்பல்துறை பஞ்சகர்ம வைத்தியசாலைக்கு கிழக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் விஜயம்



(சீலாமுனை நிருபர்)

திருகோணமலை – கப்பல்துறை பஞ்சகர்ம ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் விஜயமொன்றை நேற்று (11) மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது, கப்பல்துறை பஞ்சகர்ம ஆயுள்வேத வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், அதுதொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில், வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் எவ்வகையான பிரச்சினைகளாக இருந்தாலும் அப்பிரச்சினைகளை எனது பார்வைக்கு நேரடியாகவோ அல்லது ஆணையாளர் ஊடாகவோ கொண்டுவரும்போது அதற்கான தீர்வினை மிகக் குறுகிய காலப்பகுதிக்குள் தான் செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

இந்த விஜயத்தில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திவாகர ஷர்மா , கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

# கிழக்குப் பல்கலையின் மாணவர் ஒன்றியத்தால் எதிர்வரும் 14ஆம் திகதி மரநடுகைப் பிரசாரம்

(கனகராசா சரவணன்)

அனைத்து பெண்கள், பால் பல்வகைமையினர் மற்றும் பூமித்தாயின் உடல்களுக்காக எழுவீர் எனும் தொனிப்பொருளில் நூறுகோடி பெண்களின் எழுச்சி 2022 பிரசாரம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனவே, இந்தப் பிரசாரத்துடன் கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் இணைந்து எதிர்வரும் 14ஆம் திகதி பல்கலைக்கழக வட்டாரத்தினுள் மரக்கன்றுகளைக்கொண்டு மரநடுகைப் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாக பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் என்.ஜெயராஜ், செயலாளர் ஜீ.மதுசாந்தன ஆகியோர் நேற்று முன்தினம் (10) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

உலக சனத்தொகை கணக்கெடுப்பில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் தங்களது நாளாந்த வாழ்க்கையில் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இத்தகைய வன்முறையான பண்பாடுகளை மாற்றி அனைவரும் இணைந்து வாழும் மகிழ்வான சூழலை உருவாக்குவோம் எனும் நோக்கில் அமெரிக்காவைச் சேர்ந்த நாடகவியலாளரும், பெண்ணிலைவாதியுமான EVE ENSLER என்பவரால் முன்மொழியப்பட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளாலோ, வேறெந்தவிதமான வன்முறைகளாலோ எங்கள் வாழ்வு இருட்டடிக்கப்படாது என்று அறைகூவவும், வன்முறைகளற்ற வாழ்வு மகிழ்வானது என்று பறைசாற்றவும் இந்தப் பிரசாரமானது கலைகளுக்கூடாக ஆடுவோம், பாடுவோம், பறையறைவோம் என்ற வகையில் எழுச்சி கொள்வதாக அமைகின்றது.

அதனடிப்படையில் நூறுகோடி பெண்களின் எழுச்சி 2022 பிரசாரமானது அனைத்து பெண்கள், பால் பல்வகைமையினர் மற்றும் பூமித்தாயின் உடல்களுக்காக எழுவீர் எனும் தொனிப்பொருளில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்பானது ஆழமான நோக்கம் கொண்டது. பெண்கள் மற்றும் பால் - பால்நிலை அடிப்படையில் ஓரங்கட்டப்படும் மக்கள் அனைவருக்கும் வல்லமையளிக்கும் சமூக அரசியல் மாற்றத்தை நோக்காகக்கொண்டது.

எங்கள் எதிர்காலத்தை அச்சமற்ற, தைரியமான, ஒருவரை ஒருவர் மதிக்கும் ஆழமான நிலைப்பாடுகளின் அடிப்படையிலும், கலைகளின் ஊடாக நம்பிக்கையான வழியில் மேம்பட வைக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஆகிய நாங்களும் இம்முறை இந்த எழுச்சி பிரச்சாரத்தை முன்னெடுப்பதற்கு நூறுகோடி மக்களோடு இணைந்து கைகொடுத்துள்ளோம்.

பல்கலைக்கழகங்களுக்குள் இருக்கும் ஆதிக்க சூழல் அகற்றப்பட்டு உரிமையுடனான எதிர்கால சமூகங்களுக்கான முன்னோடிகளாக பல்கலைக்கழக மாணவ சமூகங்கள் உருவாகும் வகையில் அனைத்து மாணவர்களும் குறிப்பாக, மாணவிகளும் தத்தமது ஆளுமை திறமைகளைக் கட்டற்று வெளிப்படுத்தும் உரிமைகள், வெளிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாணவர்களின் ஆளுமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரச்சூழல் மாற்றப்பட வேண்டும், பாலியல் இலஞ்சம் ஒழிக்கப்பட வேண்டும், சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்கள் மீது அதிகாரம் பாராட்டும் பகிடிவதைகள் நிறுத்தப்பட வேண்டும். மாணவர்களுக்கு நட்பான பல்கலைக்கழக சூழலை ஏற்படுத்தும் வகையில் உள்ளக நடைமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை ஆரோக்கியமான வகையில் முன்னெடுப்போம்.

தொடர்ச்சியாக, நினைவில் வைத்து செயற்படுவோம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அருகிவருகின்ற மரக்கன்றுகளைக்கொண்டு ஒரு மரநடுகைப் பிரசாரத்தினை எதிர்வரும் 14ஆம் திகதியன்று பல்கலைக்கழக வட்டாரத்தினுள் செய்யவுள்ளோம்.

பூமியை வளப்படுத்தும் ஆரோக்கியமான மூல விதைகளை அழிவடையாமல் பாதுகாத்து எம் எதிர்கால சந்ததியினரும் பலன்பெறும் திட்டங்களையும் நம்மில் இருந்து தொடங்குவோம். பெண்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும், கட்டுப்பாடுகள் இன்றியும் கற்கும் - மேம்படும் பல்கலைக்கழகச் சூழலை உருவாக்குவோம்.

ஆதிக்கங்கள், பாசிசம், ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், காலநிலை நெருக்கடிகள், சேட்டைகள், பாலியல் வன்முறைகள், பாலியல் லஞ்சம் போன்றவற்றுக்கு எதிரான உலகளாவிய எழுச்சிகளுடன், பெண்களுக்கெதிரான, பூமித்தாய்க்கு எதிரான வன்முறைகளற்ற வாழ்வுக்காக நூறுகோடி மக்களினதும் எழுச்சியுடன் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியமும் இணைகின்றது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பட்டிருப்பு பரீட்சை நிலையத்தில் கடமையிலிருந்த அனைத்து உத்தியோகத்தர்களும் இடைநிறுத்தம்!

(கல்லடி நிருபர்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள் விநியோகத்தில் தாமதம் எனக் கூறப்பட்டு சர்ச்சைக்குள்ளான பட்டிருப்பு பரீட்சை நிலையத்தில் கடமையிலிருந்த மேற்பார்வையாளர் முதல் அலுவலகப் பணியாள் வரை அனைவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பரீட்சைகள் திணைக்களம் இந்த அதிரடி நடவடிக்கையை அன்றைய தினமே மேற்கொண்டிருந்தது.

பரீட்சை ஆரம்பமாகிய முதல் நாள் காலையில் இடம்பெற்ற கணிதப்பாடப் பரீட்சைக்கு இரு வினாப்பத்திரங்களும் காலை 8.30 மணிக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஒரு வினாப்பத்திரம் தாமதமாக வழங்கப்பட்டிருந்ததாக இச்சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

குறித்த சர்ச்சை தொடர்பாக பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.மகேந்திரகுமார் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து பிராந்திய பரீட்சைகள் இணைப்பாளர் மேற்கொண்ட விசாரணைகள் அனைத்தும் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன.

இதேவேளை, அன்று பிற்பகலில் அங்கு கூடிய பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பட்டிருப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.மகேந்திரகுமாரிடம் சென்று, பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் முதல் அனைவரையும் மாற்றவேண்டுமென போர்க்கொடி தூக்கினர். அத்தோடு, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் சம்பவ இடத்துக்குச் சென்று குரல் கொடுத்தார்.

சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் மற்றும் பரீட்சைத் திணைக்களப் பிரதி ஆணையாளர் ஜீவராணி ஆகியோரிடம் தெரியப்படுத்தினார்.

அதனையடுத்து உடனடியாகப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர், மேலதிக மேற்பார்வையாளர், மண்டப நோக்குநர்கள், பணியாள் உள்ளிட்ட அனைவரையும் இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த பட்டிருப்பு மகா வித்தியாலய பரீட்சை நிலையத்துக்கு புதிதாக மேற்பார்வையாளர் தொடக்கம் பணியாள் வரை நியமிக்கப்பட்டு, பரீட்சைகள் சுமுகமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திறந்த அன்றே மூடப்பட்ட திக்கோடை ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையம்!

## நோயாளர்கள் பெரும் சிரமம்

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திக்கோடை ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவு திறந்த காலத்திலிருந்து கடந்த மூன்று வருடங்களாக மூடப்பட்டு, கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பொதுமக்களின் சுகாதார சேவை கருதி, திக்கோடை கிராமத்தில் திறந்துவைக்கப்பட்ட ஆரம்ப சிகிச்சைப்பிரிவு திறக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை மூடப்பட்ட நிலையில் காணப்படுவதனால், 43 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட கிராம மக்கள் வைத்திய சேவைகளின்றி, சுமார் 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கல்முனை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையை நாடுவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

பின்தங்கிய எல்லைப்புறக் கிராம மக்களின் மருத்துவ சிகிச்சைத் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்ட இச்சிகிச்சை நிலையத்தில் குடிநீர் வசதியற்ற நிலை காணப்படுகின்றது. அத்தோடு நடமாடும் சேவையாக இடைக்கிடையே வெள்ளிக்கிழமை மாத்திரம் இரு மணி நேரம் சுகாதார சேவையுடன் மருந்துகள் வாகனத்துக்குள்ளிருந்து வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இந்நிலையில், மீண்டும் இச்சிகிச்சைப் பிரிவில் வைத்திய சேவைகள் இடம்பெறுவதற்குரிய நடவடிக்கைகள் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் மாதாந்த ஒன்று கூடலொன்று அண்மையில் இடம்பெற்றது. அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.ஏ.கமல் நெத்மினி தலைமையில் நாமல் ஓயா பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களை படத்தில் காணலாம். (படம் - மாவடிப்பள்ளி நிருபர்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டு. கிரானில் குழாய்க் கிணறுகள் வழங்கிவைப்பு



(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு கிரான் லவன் எழுச்சி கிராமத்தின் மக்களின் நன்மை கருதி ஒரு தொகுதி குடிநீர்க் குழாய் கிணறுகள் நேற்று (11) வழங்கிவைக்கப்பட்டன.

மீள்க்குடியேற்ற கிராமமான இக் கிராமத்தில் நீண்ட காலமாக பல்வேறுபட்ட அடிப்படை வசதிகளற்ற நிலையில், சுமார் 80 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. தங்களது குடிநீரை பெற்றுக்கொள்ள நீண்ட தூரம் சென்றே குடிநீரினை பெற்றுவந்தனர்.

இவர்களது மேற்படி நிலைமையினை கவனத்தில் கொண்டு லவன் உதவும் கரங்கள் நற்பணி மன்றத்தினால் இவ் மனிதநேய உதவி வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் விழிப்புணர்வு ஒன்றுகூடல் இறக்காமத்தில்



(மாளிகைக்காடு நிருபர்)

புலம்பெயரும் இலங்கையர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கமும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றன.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களான ஆண்களும் பெண்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம், பணிச் சுரண்டல், குடும்பப் பிரச்சினைகள் ஆகியவற்றினால் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றது. எனவே, இதுதொடர்பான விசேட விழிப்புணர்வு ஒன்றுகூடல் SWOD அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையிலும் அதன் செயற்றிட்ட இணைப்பாளர் கே.லதனின் வழிகாட்டலிலும் இறக்காமம் புலம்பெயர் தொழிலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவி எஸ்.டி.நஜீமியா தலைமையில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது.

இச்செயலமர்வில் இறக்காமம் பிரதேச செயலகப் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களான உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.நிஸ்வானுல் ஜன்னாஹ், எஸ்.எல்.ஸபூறுல் ஹஸீனா மற்றும் பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர் எஸ்.எப்.றிஸ்மியா ஜஹான் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்களான கே.எம்.ஏ. அஸீஸ் மற்றும் பீ.புஷ்பராஜா ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் பிரிவுகள் ஊடாக வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகவும் புலம்பெயர் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் அவற்றினூடாக அடைந்து கொள்ளக்கூடிய நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வு மூலம் தெளிவுபடுத்தப்பட்டன.

மேலும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தீர்வுக்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. புலம்பெயர் தொழிலாளர்கள் சம்மேளனத்தினை மேலும் வலுவூட்டி எதிர்காலத்தில் வினைத்திறனாக செயற்படுவதற்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டலும் உத்தியோகத்தர்களினால் முன்வைக் கப்பட்டன.

# அங்கவீனமுற்ற குடும்பத்தினருக்கு வீடமைப்பு உதவி வழங்கல்



(பெரியநீலாவணை நிருபர்)

நிந்தவூர் பிரதேச செயலகத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட அங்கவீனமுற்றுள்ள குடும்பத்தினருக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் வீடமைப்பு உதவித்திட்டத்துக்கு என ஒரு இலட்சம் ரூபா நிதிக்குரிய காசோலையை வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று (11) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ரி.ஜெஸான் பயனாளிக்கு காசோலையை வழங்கிவைத்தார். நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.முஜீப், முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.எச்.மின்னாஹ் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# அம்பாறை மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிந்தவூரில் கௌரவிப்பு

(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 13 தமிழ் மொழி பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றி வரும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (11) நிந்தவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போதே உத்தியோகத்தர்கள் இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் தற்போதைய நிந்தவூர் பிரதேச செயலாளருமான சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உத்தியோகத்தர்களுக்கு மடிக் கணினி பை பரிசாக வழங்கி கௌரவித்தார்.



இங்கு உரையாற்றிய பிரதேச செயலாளர்,

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் களின் சேவை மகத்தானதாகும். இவர்கள் கலையோடு நிகழ்வுகளை நடத்துவார்கள். ஒரு நிகழ்வு மேடையில் அரங்கேற்றப்படும்போது ஏற்படுகின்ற பல்வேறு சவால்கள், தடைகளை வெற்றிக்கொள்ளும் திறன் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டும். இதற்கான அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக (Event management) நிகழ்வு முகாமைத்துவம் குறித்த அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். கலை நிகழ்வுகள் என்பது மற்றவர்களை மகிழ்வித்து அவர்களை சந்தோஷப் படுத்துவதாகும். ஏனைய கலந்துரையாடல் நிகழ்வுகள் போலல்லாது இது வேறுபட்டதாகும். இன்னொருவரின் மனதுக்கும் உடலுக்கும் மகிழ்ச்சியை கொடுக்கின்ற விடயமாகும். அழகை கொடுப்பவர்கள் கலாசார உத்தியோகத்தர்கள். ஒரு பிரதேச செயலகத்தின் அழகும், கலையும் கலாசார உத்தியோகத்தர்களில் தங்கியுள்ளது. இதற்கு கலாசார உத்தியோகத்தர்கள் தங்களை அர்ப்பணித்து சேவையாற்ற வேண்டும்.

மாவட்டத்தில் நீண்டகாலமாக சேவையாற்றி வருகிறார்கள். இவர்களுடைய சேவையை பாராட்டுவதோடு எதிர்காலத்தில் வினைத்திறன் மிக்க சேவையை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# வாழைச்சேனை சட்டத்தரணிகள் சங்க புதிய தலைவராக சஹாப்தீன் தெரிவு

(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக சட்டத்தரணி இலவத்தம்பி சஹாப்தீன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுக் கூட்டத்தின்போது புதிய தலைவராக அவர், ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ள புதிய தலைவர் சட்டத்தரணி சஹாப்தீனுக்கு ஏனைய சட்டத்தரணிகள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை சட்டத்தரணிகள் சங்கமானது, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கமாக பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மீனவர்களுக்கு சுருக்குவலை அனுமதிப்பத்திரங்களை வழங்கக் கோரிக்கை

## நாடாளுமன்றில் இம்ரான் மஹ்ரூப் எம்.பி.

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை மாவட்ட மீனவர்களுக்கான சுருக்குவலை அனுமதிப்பத்திரங்களை உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.



நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் சுருக்குவலைக்கான அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இருந்தும் இதுவரை திருகோணமலை மாவட்டத்தில் இந்த அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான அனுமதி திருகோணமலை மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு வழங்கப்படவில்லை.

கடைசியாக 2019ஆம் ஆண்டே இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. கடந்த இரண்டு வருட காலமாக இந்த அனுமதி கிடைக்காததால் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதனால் பலர் கடற்படையினரால் கைதும் செய்யப்படுகின்றனர்.

எனவே, புத்தளம் மற்றும் மன்னார் பகுதிகளைப் போன்று திருகோணமலையிலும் இந்த அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அனுமதியை வழங்குமாறு தெரிவித்தார்.

# கொழும்பில் நியமனம்பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஹரீஸ் எம்.பி. தலையீட்டால் அம்பாறைக்கு உடனடி இடமாற்றம்

(நாவிதன்வெளி நிருபர்)

கடந்த 2020ஆம் ஆண்டு பட்டதாரி பயிலுனர்களாக நியமனம்பெற்று அண்மையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக மத்திய அரசின் சுகாதார அமைச்சின்கீழ் உள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சின் ஏனைய திணைக்களங்களுக்கு இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸை சந்தித்து தங்களுக்கு சொந்த மாவட்டத்துக்கு அல்லது அருகில் உள்ள மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுத்தருமாறும் தங்களுடைய கஷ்டங்களையும் துன்பங்களையும் எடுத்துக் கூறினர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் சம்பந்தப்பட்ட சுகாதாரத்துறை அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல, அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் போன்றவர்களுடன் பேசி உடனடியாக நேற்று முன்தினம் (10) சம்பந்தப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரையோர பிரதேசத்தில் மத்திய அரசின்கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு நியமனக் கடிதங்களை பெற்றுக்கொடுத்தார்.



அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் பலர் ஹரீஸ் எம்.பியை சந்தித்து மேற்படி விடயமாக எடுத்துரைத்ததைத் தொடர்ந்து ஹரீஸ் எம்.பி. உடனடியாக அதற்கான தீர்வினைப் பெற்றுக்கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி இடமாற்றம் பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேற்று கொழும்பில் ஹரீஸ் எம்.பியை சந்தித்து நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

அதேநேரம் கிழக்கு மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட திணைக்களங்களில் நியமனம் பெற்று தூர இடங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களை தேசிய பாடசாலைகளில் நியமிப்பதற்கு அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநருடன் ஹரீஸ் எம்.பி. பேசியதையடுத்து அதற்கான இடம்மாற்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# மொரட்டுவ பல்கலை மருத்துவப்பீட நிர்மாணத்துக்காக குவைட்டிலிருந்து கடன் ஒப்பந்த அடிப்படையில் நிதி

அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் நெதல் ஏ. அல்-ஒலாயன் தலைமையிலான குழுவினர் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பீடத்தை நிர்மாணிப்பதற்கும் அவற்றைச் சுத்தப்படுத்துவதற்குமான கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

கிழக்கு, தெற்காசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான நடவடிக்கைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் யூசுப் அல்-படரை உள்ளடக்கிய விஜயம் செய்திருந்த குழுவினர், வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்தனர்.

இலங்கையின் திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் நெதல் ஏ. அல்-ஒலாயன் ஆகியோர் கடந்த 03ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பிலுள்ள நிதி அமைச்சில் வைத்து இலங்கையின் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் முன்னிலையில் கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். கைச்சாத்திடும் நிகழ்வைத் தொடர்ந்து, பிரதிநிதிகள் குழுவினர் அமைச்சர் ராஜபக்ஷவை நிதியமைச்சில் சந்தித்தனர். மரியாதை நிமித்தம் இடம்பெற்ற சந்திப்பின்போது இலங்கைக்கும் குவைட்டுக்கும் இடையிலான பரஸ்பர நன்மை பயக்கும் பங்காளித்துவத்தை நினைவுகூர்ந்த அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், மிகவும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட கட்டுமானத் திட்டமான மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீட நிர்மாணத்திற்கு நிதியுதவி வழங்கியதற்காக குவைட்டுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். குவைட் மற்றும் ஏனைய வளைகுடா நாடுகளிலுள்ள தொழில் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக, இளைஞர்களுக்கான தாதியர் மற்றும் சுகாதார உதவித் தொழிலாளர் பயிற்சி வசதி போன்ற இலங்கையிலுள்ள சுகாதாரத்துறையின் ஏனைய முக்கியமான பகுதிகளை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் விளக்கினார்.

இலங்கையின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான குவைத்தின் ஆதரவையும், நட்புறவின் அடிப்படையில் இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு ஈடுபாட்டை மேலும் முன்னேற்றுவதற்கும் நெதல் ஏ.அல்-ஒலாயன் உறுதியளித்தார்.

இலங்கைக்கான குவைட் தூதுவர் கலாஃப் பு தைர் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்ட அதேவேளை, வெளிநாட்டு அமைச்சருடனான சந்திப்பின்போது இலங்கை வெளிநாட்டு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



உலக உணவுத் திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் அப்துர் ரஹீம் மற்றும் உலக உணவுத் திட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி, உணவு மற்றும் விவசாய முகவராண்மையின் பிரதிநிதி விமலேந்திர சராண் ஆகியோருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் (10) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

# அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் பிரச்சினைகளை தீர்க்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தல்

அகில இலங்கை சாசனாரக்ஷக சபையில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் (10) பிற்பகல் பிரதமரின் செயலாளர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் கலந்துரையாடலின்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு பிரதமர் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்.

நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வினை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்துவதற்கு பிரதமரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.



அறநெறி பாடசாலை கொடி தினம், அறநெறி பாடசாலை தின தேசிய நிகழ்வு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திறமைக்கான தேசிய நிகழ்வு ஆகியவற்றை நடத்துவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அறநெறி பாடசாலை புத்தகங்களை விநியோகிப்பதற்கான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு மாவட்ட செயலாளர்களின் உதவியை பெற்றுக் கொள்ளுமாறு பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் புனித பூமி மற்றும் தொல்லியல் தலங்களில் தற்போது நிலவும் பிரச்சினைகளை தீர்த்து அவற்றிலுள்ள கல்வெட்டுகளை எதிர்கால தலைமுறையினருக்காக பாதுகாக்க வேண்டும் என பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

அகில இலங்கை சாசனாரக்ஷக சபையை பிரதிநிதித்துவப்படுத்தி வணக்கத்திற்குரிய பேராசிரியர் தும்புல்லே சீலக்கண்ட தலைமை தேரர், வணக்கத்திற்குரிய முகுனுவெல அனுருத்த தலைமை தேரர், வணக்கத்திற்குரிய மெதகம தம்மானந்த தேரர், வணக்கத்திற்குரிய மெதகமுவே விஜயமைத்திரி அனுநாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் இதன்போது கலந்து கொண்டனர்.

மேலும் பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன உள்ளிட்ட அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதமரின் மேலதிக செயலாளர் நிசாந்த வீரசிங்க மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# சுற்றுலாப்பயணி உள்ளிட்ட 10 பேரை யாழ். நகர மத்தியில் பதம் பார்த்த நாய்

## மாநகர சபையால் தேடும் பணி முன்னெடுப்பு

(யாழ். செய்தியாளர்)

யாழ். நகர் மத்தி பகுதியில் கட்டாக்காலி நாய் ஒன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் உள்ளிட்ட 10இற்கும் மேற்பட்டவர்களை கடித்துள்ளது. அந்த நாயைத் தேடும் பணிகள் மாநகர சபை ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நகர் மத்தியில் கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி என்பனவற்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மதியம் முதல் மாலைவரையிலான நேரத்தினுள் 10இற்கும் மேற்பட்டவர்களை நாய் கடித்துள்ளது.

அதில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணி ஒருவருக்கு இரண்டு கால்களிலும் நாய் கடித்துள்ளது. மேலும் பலர் பலத்த காயங் களுக்குள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், நாயை மாநகர சபை ஊழியர்கள் ஊடாக பிடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும், நாய் தொடர்பிலான தகவல்கள் தெரியாமையால் அதனைப் பிடிக்க முடியவில்லை என தெரிவித்துள்ளனர்.

குறித்த நாய் தொடர்பிலான தகவல்கள் தெரிந்தவர்கள் யாழ். மாநகர சபைக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# வெளிநாட்டு மாணிக்கக்கல் வியாபாரிகளிடம் ஒரு தொகை வரி அறவிட யோசனை

## பேருவளை நகர சபையில் யோசனை முன்வைப்பு

(பேருவளை செய்தியாளர்)

பேருவளை நகர சபைக்குட்பட்ட சீனன்கோட்டை பத்தை இரத்தினக்கல் வர்த்தக சந்தைத் தொகுதியில் இரத்தினக்கற்களை கொள்வனவுசெய்யும் வெளிநாட்டு வியாபாரிகளிடமிருந்து ஒரு தொகை வரியை அறவிடும் யோசனையொன்றை பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் மொஹமட் நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முன்வைத்துள்ளார்.

நகர சபையின் மாதந்தக் கூட்டம் நகர சபையில் 08 ஆம் திகதி நடைபெற்றபோது இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக நகர பிதா தெரிவித்தார்.

சர்வதேச புகழ்பெற்ற பத்தை இரத்தினக்கல் வர்த்தக சந்தைக்கு உலகின் பல நாடுகளிலிருந்தும் முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் வருகைதந்து கோடிக்கணக்கான ரூபாவுக்கு மாணிக்கக்கற்களை கொள்வனவுசெய்து தமது நாட்டிற்கும் வேறு நாடுகளுக்கு எடுத்துச்சென்று அதனை விற்பனை செய்து பாரியளவில் இலாபம் பெறுகின்றனர்.

நீண்டகாலமாக எமது நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பூமியை தமது வியாபார நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு வர்த்தகர்கள் பயன்படுத்தி வருகின்றபோதிலும் அதற்காக ஒரு சதமேனும் நகர சபை அறவிடுவதில்லை.

பேருவளைக்கு வந்து இரத்தினக்கற்களை கொள்வனவுசெய்யும் வெளிநாட்டவர்களுக்கு நகர சபை மூலம் அனுமதி அட்டை ஒன்றை வழங்கவும் அந்த அட்டையை பயன்படுத்தி நகர சபை எல்லையில் மாணிக்கக்கற்களை கொள்வனவுசெய்ய முடியும் எனவும் அதற்காக அவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணம் வரியாக அறவிடப்படும் என்றும் நகர பிதா கூறினார். இவ்வாறு ஒரு தொகையை வரியாக அறவிடுவதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகர்களினால் நகர சபைக்கு மாதாந்தம் சுமார் 10 இலட்சம் ரூபா வரையில் வருமானத்தையீட்டிக்கொள்ள முடிம் என்றும் இவ்வாறு அறவிடப்படும் பணம் நகரின் அபிவிருத்திப்பணிக்கு பயன்படுத்தப்படும் என்றும் கூறினார். இந்த இடைக்கால யோசனையை நடைமுறைப்படுத்த நகர சபை அங்கத்தவர்களின் ஒத்துழைப்பையும் அவர் கூறியுள்ளார்.

இரத்தினபுரி மாணிக்கக்கல் வர்த்தகர் சங்க தொகுதிக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரும் வெளிநாடுகளின் வியாபாரிகளிடமிருந்தும் இவ்வாறானதொரு வரியை இரத்தினபுரி மாநகர சபையும் அறவிட யோசனையொன்று எதிர்காலத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது என்றும் பேருவளை நகர சபையும் இதேபோன்று வரியை அறவிடும் நோக்கில் இந்த இடைக்கால யோசனையை தான் முன்வைத்ததாகவும் நகர பிதா மஸாஹிம் மொஹமட் மேலும் குறிப்பிட்டார்.




# வவுனியா பொது வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பம்

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் வவுனியா மாவட்டத்தின் பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டே அதற்குரிய முடிவுகள் பெறப்பட்டுவந்தன.

கடந்த ஆவணி மாதமளவில் மத்திய அரசினால் வவுனியா வைத்தியசாலைக்கு 35 மில்லியன் ரூபா பெறுமதியான பி.சி.ஆர். ஆய்வுகூட தொகுதியானது வழங்கப்பட்டது.

இந்நிலையில், வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.ராகுலன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வவுனியா வைத்தியசாலை சிரேஷ்ட ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் மற்றும் நுண்ணுயிரியல் நிபுணர் ஆகியோரின் தீவிர முயற்சியின் பலனாக அதற்குத் தேவையான உபகரணங்கள் ஒவ்வொன்றாக தருவிக்கப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமைமுதல் வவுனியா



பொது வைத்தியசாலையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


இது தொடர்பாக வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளரிடம் கேட்டபோது, மத்திய அரசினால் பி.சி.ஆர். ஆய்வுகூடம் வழங்கப்பட்டிருப்பதன் மூலமாக வவுனியா மற்றும் வடமாகாணத்தின் மற்றைய மாவட்டங்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களிலே உயிரிழந்தவர்கள் மீதான பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் ஏனைய பரிசோதனைகள் யாழ். போதனா மருத்துவமனை அல்லது அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த முடிவுகள் பெறுவதற்கு பெரும் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக வைத்திய குழாம், நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இதனை கருத்திற்கொண்டு வவுனியா பொது வைத்தியசாலையின் பி.சி.ஆர். ஆய்வுகூடமூடாக முதற்கட்ட பணியாக உயிரிழந்தவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதோடு, தீவிர நோயாளிகளுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டவுள்ளன என அவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வாய்வுகூட தொகுதியை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இயங்குநிலைக்கு கொண்டுவர உதவிய மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்த அவர், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் (ஆய்வுகூடம்) வைத்தியர் சுதத் தர்மரத்னவுக்கு தனது விசேட நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

# 4ஆவது குவாட் உச்சிமாநாடு: இந்தியா - அமெரிக்கா இடையே இரு தரப்பு பேச்சு







(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில் 4ஆவது குவாட் கூட்டத்தில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் இடையே இரு தரப்பு சந்திப்பு நடைபெற்றது.

இந்தியா, அவுஸ்திரேலியாவுடனான உறவு குவாட் உச்சிமாநாட்டிலும் தொடரும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னில், அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் மரிஸ் பெய்ன் தலைமையில் நான்காவது குவாட் வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன், அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் மாரிஸ் பெய்ன், ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோருடன் இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இதில் கலந்துகொண்டு பேசினார்.

இதன்போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கர்தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் வகுக்கப்பட்ட தொலைநோக்குப் பார்வையில் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதை மதிப்பாய்வு செய்ய இன்றைய கூட்டம் நமக்கு வாய்ப்பளிக்கிறது. தொலைநோக்குப் பார்வையில் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதை மதிப்பாய்வு செய்ய இன்றைய கூட்டம் நமக்கு வாய்ப்பளிக்கிறது.

குவாட் கூட்டம் மிகவும் சிறப்பாக செயல்பட்டதற்கு காரணம், நமது இருதரப்பு உறவுகள் மிகவும் வலுவாக இருந்ததால்தான். இந்தியா - அவுஸ்திரேலியா இடையேயான உறவு மிகச்சிறப்பாக இருப்பதாகவும், அது குவாட் உச்சிமாநாட்டிலும் தொடரும்.

குவாட் கூட்டம் மிகவும் சிறப்பாக செயல்பட்டதற்குக் காரணம், நமது இருதரப்பு உறவுகள் மிகவும் வலுவாக இருந்ததால்தான் என்று பேசினார்.

இந்தக் கூட்டத்தின் இடையே மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கனுடன் தனியே பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் இருநாட்டு தரப்பிலுள்ள பல்வேறு பிரச்சினை குறித்து இருவரும் பேசினார்கள்.

## இந்திய செய்திகள்

## லதா மங்கேஷ்கரின் வாழ்க்கையை படமாக்க 3 இயக்குநர்கள் போட்டி



பிரபல பாடகி லதா மங்கேஷ்கர், கடந்த 6ஆம் திகதி காலமானார். அவரது வாழ்க்கையைத் தழுவி பல்வேறு புத்தகங்கள் வெளியாகியுள்ளன. இதைத் தழுவி படம் எடுக்க சில ஆண்டுகளுக்கு முன் சஞ்சய் லீலா பன்சாலி முயன்றார்.

சில காரணங்களால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இப்போது லதாவின் மறைவுக்குப் பின்னர், மீண்டும் அந்தத் திட்டத்தை அவர் கையில் எடுத்திருக்கிறார்.

அதேசமயம், இயக்குநர்கள் ராகேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ரா, ஆனந்த் எல்.ராய் ஆகியோரும் லதாவின் வாழ்க்கையை படமாக்க விரும்புவதாக அறிவித்துள்ளனர். இதனால் அவரது கதையை யார் படமாக்குவார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது. லதா மங்கேஷ்கரின் குடும்பத்தார், யாருக்கு அனுமதி தருகிறார்களோ அவர்கள்தான் இந்தப் படத்தை எடுக்கமுடியும்.

### சர்ச்சையை கிளப்பிய ஹிஜாப் விவகாரம்:

## பாரம்பரிய உடையணிந்து அருணாச்சல பிரதேச பாடசாலைகள் அசத்தல்



கர்நாடகத்தில் கல்வி நிலையங்களில் மாணவிகள் ஹிஜாப் அணிந்து வரலாமா, வேண்டாமா என்ற விவாதம் தீவிரமடைந்துள்ள நிலையில், பாரம்பரிய உடை அணிந்து வருவதற்கு அருணாச்சல பிரதேசத்திலுள்ள தனியார் பாடசாலைகள் அனுமதி வழங்கியுள்ளன.

2022-23 கல்வியாண்டில், அனைத்து திங்கட்கிழமைகளிலும் பாரம்பரிய உடை அணிந்து வருவதற்கு பழங்குடியின உட்பட பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அருணாச்சல பிரதேச பாடசாலைகள் அனுமதி வழங்கியுள்ளன.

அருணாச்சல பிரதேச தனியார் பாடசாலைகள் மற்றும் குழந்தைகள் நல சங்கத்தின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதில், 180இற்கும் மேற்பட்ட பாடசாலைகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து பேசிய சங்கத்தின் துணை தலைவர் தார் ஜானி,

"அருணாச்சலத்தில் 100இற்கும் மேற்பட்ட பழங்குடியினர் மற்றும் துணை பழங்குடியினர் உள்ளனர். ஒவ்வொரு திங்கட்கிழமையும் பழங்குடியினர் உட்பட அனைத்து மாணவர்களும் தங்கள் பாரம்பரிய உடை அணிந்து பாடசாலைக்குச் செல்ல அனுமதி வழங்கியுள்ளோம். இது அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சமூக வேறுபாடுகளின்றி மாணவர்கள் தங்கள் பாரம்பரிய உடைகளை அணிய சுதந்திரம் உண்டு. யாராவது நிஷியாக இருந்தால், அவர் நிஷி ஆடையை அணிவார். காலோக்கள் தங்கள் பாரம்பரிய உடையை அணிவார்கள். அதேபோல், பழங்குடியினர் அல்லாதவர்களும் தங்கள் பாரம்பரிய உடையை அணிய சுதந்திரம் உண்டு.

நிஷி மாணவர் சங்கம் இதற்கு முன்பு மாநில அரசிடம் இந்தப் பிரச்சினையை எழுப்பியது. பெற்றோர்களில் ஒருசிலர் இதை செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினர். பெரும்பாலான பெற்றோர்கள், மாணவர்கள் தங்கள் பாரம்பரிய உடைகளை வாரத்திற்கு ஒரு முறை அணியவேண்டும் என்று பரிந்துரைத்தனர்.

இந்த முடிவு உள்ளூர் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை மேம்படுத்த பங்களிக்கும். இந்த முடிவை பின்பற்றாத பாடசாலைகள் மீது சங்கம் நடவடிக்கை எடுக்கும். பல்வேறு சமூக மாணவர்கள் படிக்கும் கல்வி நிலையங்களின் சீருடைகளில் எந்தவொரு மதத்தின் அடையாளமும் பிரதிபலிக்கக்கூடாது" - என்றார்.

## 'மகான்'ஐ பிடித்திருக்கிறது



விக்ரம், துருவ் இணைந்து நடித்த 'மகான்' திரைப்படம் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ள நிலையில், ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

இந்தப் படத்தில் சிம்ரன், பாபி சிம்ஹா, சனந்த் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். சந்தோஷ் நாராயணன் இந்தப் படத்துக்கு இசையமைக்க, ஸ்ரேயாஸ் கிருஷ்ணா இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில், இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ், நடிகர் ரஜினிகாந்த் தன்னை தொலைபேசி வாயிலாக அழைத்து பாராட்டியதாக தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அவரது பதிவில், சிறப்பான திரைப்படம். நடிகர்களின் நடிப்பு அருமை. நேர்த்தியான பணி என்று நடிகர் ரஜினிகாந்த் பாராட்டினார். ரஜினிகாந்த்துக்கு மகான் மிகவும் பிடித்திருக்கிறது. தொலைபேசி மூலம் அழைத்து பாராட்டியதற்கு நன்றி தலைவா. நாங்கள் பெருமையாக உணர்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் உருவான 'பேட்ட' திரைப்படம் நடிகர் ரஜினிகாந்த்துக்கு திருப்புமுனையாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. ஒரு ரஜினி ரசிகராக 'பேட்ட' படத்தில் கார்த்திக் சுப்புராஜ் அவரைக் கையாண்ட விதம் படத்துக்கு கூடுதல் பலமாக அமைந்திருந்தது.

### 'வைரமுத்து இலக்கியம் 50'

## பொன்விழா இலட்சினையை வெளியிட்டார் முதலமைச்சர்

இலக்கியத்துறையில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்திருக்கும் கவிஞர் வைரமுத்துவின் பொன்விழாவை முன்னிட்டு 'வைரமுத்து இலக்கியம் 50' என்ற இலட்சினையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"கவிஞர் வைரமுத்து இலக்கியம் எழுத வந்து 50 ஆண்டுகள் நிறைகின்றன. அவரது முதல் கவிதை நூலான 'வைகறை மேகங்கள்' கவியரசு கண்ணதாசன் அணிந்துரையோடு 1972இல் வெளிவந்தது. அவர் அப்போது பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. இரண்டாம் ஆண்டு மாணவர். இந்த 50 ஆண்டுகளில் அவர் 38 நூல்களும் 7500 பாடல்களும் எழுதியிருக்கிறார்.

கவிஞர் வைரமுத்துவின் இலக்கியப் பொன்விழா இந்த ஆண்டுமுழுவதும் பல்வேறு ஊர்களிலும், மாநிலங்களிலும், நாடுகளிலும் கொண்டாடப்படவிருக்கிறது. அந்த விழாவின் தொடக்க நிகழ்வாக 'வைரமுத்து இலக்கியம் 50' என்ற இலட்சினையை தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். "தந்தை இல்லாத இடத்தில் நீங்கள் இருந்து நிறைவுசெய்ய வேண்டும்" என்று முதலமைச்சரை கவிஞர் வைரமுத்து கேட்டுக்கொண்டார்.

28 வயதில் 'இதுவரை நான்' என்ற சுயசரிதை எழுதியவர் கவிஞர் வைரமுத்து. கருவாச்சி காவியம் - வைரமுத்து கவிதைகள் மூன்றாம் உலகப்போர் - தண்ணீர் தேசம் -- கொஞ்சம் தேநீர் நிறைய வானம் - திருத்தி எழுதிய தீர்ப்புகள் - வைரமுத்து சிறுகதைகள் - பெய்யெனப் பெய்யும் மழை என்று வைரமுத்துவின் படைப்புலகம் விரிந்துகொண்டே வந்திருக்கிறது.




அண்மையில் வெளியிடப்பட்ட 'தமிழாற்றுப்படை' நூல் மூன்றே மாதங்களின் பத்துப் பதிப்புகள் கண்டு தமிழ்ப் பதிப்புலகில் சாதனை படைத்திருக்கிறது.

திரைப்படப் பாடலாசிரியருக்கென்று 7 முறை தேசிய விருதுபெற்ற இந்தியாவின் ஒரே பாடலாசிரியர் இவர்தான். சிறந்த பாடலாசிரியருக்கான தமிழ்நாடு அரசு விருதினையும் 6 முறை வென்றவரும் இவர்மட்டும்தான். 2003இல் 'சாகித்ய அகாடமி' விருதுபெற்ற இவரது 'கள்ளிக்காட்டு இதிகாசம்' 23 இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. அண்மையில் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியான 'கள்ளிக்காட்டு இதிகாசம்' நாட்டின் சிறந்த புத்தகத்துக்கான 'ஃபிக்கி' விருதுக்குத் தெரிவுபெற்றது.

இலக்கியத்தின் பங்களிப்பிற்காக இந்தியாவின் உயர்ந்த விருதுகளான 'பத்மஶ்ரீ' மற்றும் 'பத்மபூஷண்' விருதும், பாரதீய பாஷா பரிஷித் அமைப்பின் 'சாதனா சம்மான்' விருதும் பெற்றிருக்கிறார். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களிலும் கௌரவ டொக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்.

அந்நாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இவரை 'கவி சாம்ராட்' என்று அழைத்தார். அந்நாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் 'காப்பியக் கவிஞர்' எனறு குறித்தார். அந்நாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இவருக்கு 'கவிப்பேரரசு' என்று பட்டமளித்தார். இவருடைய படைப்புகள் ஆங்கிலம் - ஹிந்தி - தெலுங்கு - கன்னடம் - மலையாளம் - உருது - வங்காளம் - ரஷ்யன் - நார்வேஜியன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கவிதை - நாவல் - சிறுகதை - திரைப்பாட்டு - ஆராய்ச்சிக் கட்டுரை - திரை உரையாடல் - பயணக் கட்டுரை - சரிதை - சுயசரிதை என்று இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களிலும் இவரது பயணம் நீண்டுகொண்டேயிருக்கிறது. இலக்கியத்தின் வழியே சமூகநலப் பணிகளையும் ஆற்றிவருகிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பா.ஜ.கவில் இணைந்தார் 'கிரேட் காளி'




பிரபல தொழில்முறை மல்யுத்த வீரர் தலிப் சிங் ராணா. மல்யுத்தத்தில் புகழ்பெற்ற ராணா, அன்புடன் கிரேட் காளி என்று அழைக்கப்படுகிறார். இந்நிலையில், டில்லி அலுவலகத்தில் மூத்த தலைவர்கள் முன்னிலையில், 'கிரேட் காளி' நேற்றுமுன்தினம் பா.ஜ.கவில் இணைந்துகொண்டுள்ளார்.

இதுகுறித்து கிரேட் காளி தெரிவிக்கையில்,

"நாட்டுக்காக பிரதமர் மோடி செய்துவரும் பணிகளால், அவர்தான் சிறந்த பிரதமர் என்று உணர்கிறேன். அதனால், நாட்டின் வளர்ச்சிக்காக அவர் எடுக்கும் பணிகளில் நானும் பங்கேற்க வேண்டும் என்ற உணர்வில் பா.ஜ.கவில் இணைந்திருக்கிறேன்" - என்றார்.

கடந்த 2000ஆம் ஆண்டு மல்யுத்த விளையாட்டுகளில் ஈடுபடத் தொடங்கினார். அதன்பின் டபிள்யூ.டபிள்யூ.இ. சாம்பியன் பட்டம் வென்றார். தவிர, 4 ஹொலிவுட் படங்கள், 2 பொலிவுட் படங்களில் நடித்துள்ளார்.

பஞ்சாப் பொலிஸ் அதிகாரியாகவும் 'கிரேட் காளி' பணியாற்றியிருக்கிறார். அதனால், எதிர்வரும் 20ஆம் திகதி பஞ்சாபில் நடைபெறவுள்ள தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார். முன்னதாக கிரேட் காளி விவசாயிகள் போராட்டத்துக்கும் ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.